மாநகர சபை, யாழ்ப்பாணம்.
பக்கங்கள் : பதின்நான்கு
Registered as a Newspaper
# உதயன்
விலை ரூபா 15.00
www.uthayan.com
சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 08 புதன்கிழமை (23.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 238

# புலிகளின் யுத்த நிறுத்தத்தை அரசு கணக்கிலும் எடுக்காது!

## கொழும்பில் 'சார்க்' நடக்கும்; வடக்கில் போர் தொடரும் பேச்சுக்கு கிஞ்சித்தும் இடமில்லை என்கிறார் அமைச்சர்



கொழும்பு, ஜூலை 23

புலிகளால் அறிவிக்கப்பட்டிருக்கும் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை கணக்கிலும் எடுக்கப்போவதில்லை என்று இலங்கை அரசு அறிவித்திருக்கின்றது.

அரசின் இந்த நிலைப்பாட்டை நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்த வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகம, கொழும்பில் சார்க் மாநாடு நடக்கும். அதேவேளையில் வடக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீதான யுத்தம் தொடரும்- என்றும் காட்டமாகக் கூறினார். (14 ஆம் பக்கம்

## ஊரடங்கு இன்றுமுதல் வழமையான நேரத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 23

குடாநாட்டில் வழமைபோல் இன்று இரவு 9 மணிமுதல் அதிகாலை 4.30 மணி வரை ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் என்று பலாலி படைத்தலைமையக ஊடகப்பிரிவு நேற்றிரவு தெரிவித்தது.

நேற்றிரவு இரவு 7 திடீரென மணிக்கு நடை முறைக்கு கொண்டுவரப்பட்ட ஊரடங்கு இன்று அதிகாலை 4.30 மணிக்கு நீக்கப்பட் டுள்ளது என்றும் -

மக்களின் பாதுகாப்புக் காரணத்துக்காக நேற்று நேரமாற்றம் செய்யப்பட்டது என் றும் - ஊடகப்பிரிவு அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

நேற்றிரவு 7 மணிக்கு ஊரடங்கு திடீ ரென நடைமுறைக்குக் கொண்டு வரப் பட்டது குறித்து தகவல் தெரியாததால் மக் கள் பல சிரமங்களை எதிர்நோக்க நேரிட் டது. (அ-1)

## முதலில் புலிகள் சரணடையட்டும்; அதற்குப் பிறகுதான் போர்நிறுத்தம்

### அரசுக்கு அந்தத் தேவை எழவில்லை என்கிறார் கோத்தபாய



கொழும்பு, ஜூலை 23

கொழும்பில் சார்க் மாநாடு நடைபெறும் காலப்பகுதியில் போர் நிறுத்தத்தைப் பேணப் போவதாக விடுதலைப் புலிகள் வெளியிட்ட அறிவிப்பைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் நிராகரித்துள்ளார்.

''முதலில் அவர்கள் (புலிகள்) ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு எங்களிடம் வந்து சரணடையட்டும். அதற்குப் பிறகு போர் நிறுத்தத்தைப்பற்றி யோசிக்கலாம்.'' - என்று கூறினார் கோத்தபாய ராஜபக்ஷ.

''யுத்த முனையில் இராணுவ ரீதியில் பலவீனமான நிலையில் உள்ள விடுதலைப் புலிகள் பேச்சு என்ற பெயரில் மீண்டும் தம்மைப் பலப்படுத்துவதற்காக மேற் கொள்ளும் தந்திரோபாயமே இது.'' - என்றும் பாது

(14 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே
கல்விச்சுடர்

7 ஆம் பக்கத்தில்:
க.பொ.த (உயர்தர)மாதிரி வினாத்தாள்
★ கணக்கீடு
8 ஆம் பக்கத்தில்:
★ தரம் - 5 மாணவருக்கான இலகுவழிப் பயிற்சி பரீட்சை

## தெஹிவளையில் இருவர் வெள்ளை வானில் கடத்தல்

கொழும்பு, ஜூலை 23

தெஹிவளை,காலி வீதியிலுள்ள எஸ். ஜே.சி. கிறியேஷன் நிலையத்தில் தொழில் புரியும் முத்துக்குமாரு செல்வகுமார் என்ற 28 வயதுடைய இளைஞரும், 37 வயதுடைய பழனியாண்டி சண்முகராஜாவும் நேற்றுமுன்தினம் 21 ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் வெள்ளை வானில் சீருடையில் வந்த நபர்களினால் கடத்தப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ் கூட்டணி அரசு 19 வாக்குகளால் தப்பியது! மன்மோகன் சிங்கை பேசவிடாது எதிர்கட்சிகள் கூச்சல்!!

புதுடில்லி, ஜூலை 23

இந்திய மத்திய அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் கூட்டணி அரசு 19 வாக்குகளால் தப்பிப் பிழைத்தது; வென்றது.

நாடாளுமன்றத்தில் நேற்று பலத்த கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் நடந்த வாக்குப் பதிவில் காங்கிரஸ் அரசு மொத்தம் 275 வாக்குகளைப் பெற்றது. அரசுக்கு எதிராக 256 வாக்குகள் விழுந்தன.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் மன்மோகன் அரசு பெற்ற வெற்றியுடன், கடந்த சில தினங்களாக இந்தியாவிலும் அண்டை நாடுகளிலும் ஏற்பட்டிருந்த கடும் பரபரப்பு முடிவுக்கு வந்தது.



பிரதமர் மன்மோகன்சிங்தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமெரிக்க அரசுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்வதற்கு தீர்மானித்ததையடுத்து, அரசுக் கூட்டணியில் அங்கம் வகித்த இடதுசாரிகள் அரசுக்கான தமது ஆதரவை விலக்கிக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்புக் கோரும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மடுமாதாவின் திருச்சொரூபம் இப்போது மன்னார் ஆயரின் இல்லத்திற்கு மாற்றம்

### தேவன்பிட்டியில் ஷெல்கள் வீழ்ந்து வெடிப்பதால்



மன்னார், ஜூலை 23

மடுமாதா தேவாலயத்தில் இருந்து பாதுகாப்புக் கருதி எடுத்துச் செல்லப்பட்டு தேவன்பிட்டி புனித சவேரியார் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த மடு அன்னையின் திருச்சொரூபம் நேற்று பி.ப 3மணிக்கு மன்னார் ஆயர் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. எனினும் மக்கள் வழிபாட்டுக்கு உடனடியாக வைக்கப்படமாட்டாது.

யாழ்.ஆயரின் செயலாளர் வண.றொஷான் அடிகள் இதனைத் தெரிவித்தார்.

மடுத்தேவாலயப்பகுதியில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததை அடுத்து மாதாவின் திருச்சொரூபம் தேவன்பிட்டிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது தெரிந்ததே.

தேவன்பிட்டி பிரதேசத்தில் தற்போது ஷெல்கள் வீழ்ந்து வெடிப்பதையடுத்து நேற்றுக் காலை திருச்சொரூபம் கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கிருந்து ஓமந்தை சோதனை நிலையம் ஊடாக வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்ட திருச்சொரூபம் மன்னார் ஆயர் இல்லத்தை நேற்று பி.ப 3மணியளவில் சேர்ந்தது.

அங்கு பரிசுத்தமான இடத்தில் திருச்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை ஓரிரு மாதங்களில் இயங்க வைக்க நடவடிக்கை

### லங்கா சிமெந்து நிறுவனத்தின் தலைவர் தகவல்



யாழ்ப்பாணம், ஜூலை 23

காங்கேசன்துறையிலுள்ள லங்கா சிமெந்து நிறுவனத் தொழிற்சாலையை விரைவில் மீளவும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இன்னும் ஓரிரு மாதங்களில் அதனை இயங்கவைக்க முடியும்.

இத்தகவலை நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் லங்கா சிமெந்து நிறுவனத் தலைவர் எஸ். ஜே. பரணகம தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

லங்கா சிமெந்து நிறுவனத் தலைவராக நான் பதவியேற்று 5 மாதங்கள் ஆகின்றன.

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மின்கலக் கடை உரிமையாளர் கரவெட்டியில் நேற்றுக் காலை சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 23

மின்கலக்(பற்றி) கடை உரிமையாளரான ஒருவர், கரவெட்டி, கோயில் சந்தைப் பகுதியில் உள்ள அவரது கடையில் வைத்து நேற்றுக் காலை 9மணியளவில் இனந்தெரி யாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப் பட்டார்.

சாவகச்சேரியை சொந்த இடமாக கொண்ட ஞானேந்திரன் பார்த்தீபன் (வயது 34) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்ட வராவார்.

நேற்றுக்காலையில் தமது வர்த்தக நிலையத்தை திறந்து விட்டு அங்கு அலு வலாக இருந்த வேளையில், அங்கு மோட் டார் சைக்கிளில் வந்த மூவர் அவரை சுட்டு விட்டுத் தப்பி விட்டனர் எனத் தெரிவிக் கப்பட்டது.

விசாரணையின் பின்னர் சடலம் பருத் தித்துறை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (அ-01-25)

## இதய அஞ்சலி

எமது பாடசாலை ஸ்தாபகர் ்ுமரர் கந்தையா அவர்களின் அன்பு மகளும், எமது பாடசாலை அதிபர் க.செல்வக்குமாரன் அவர் களின் அன்பு மாமியாரும், எமது பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபரும், முன்னாள் உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளருமான அ.தற் பரானந்தன் அவர்களின் அன்புத் தாயாரும், எமது பாட சாலை ஆசிரி யர்களான திருமதி ந.தற்பரானந்தன் அவர்களின் அன்பு மாமியாரும், திருமதி கு.விஸ்வநாதன் அவர்களின் அன்புப் பேர்த்தியாருமாகிய

### அப்புத்துரை சேதுநாயகி

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம், (76583)
யா/கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாசாலை.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பிரதி அதிபர்
திருமதி பாக்கியலக்சுமி தவக்குமார்
அவர்களின் அன்புச் சகோதரன்

### சுப்பிரமணியம் கனகசிங்கம்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
(76584) யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

## மரண அறிவித்தல்

### செல்லர் பூபாலசிங்கம்

(இளைப்பாறிய நிறைவேற்றுப் பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்)



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிட மாகவும் இல.27, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிட மாகவும் கொண்ட செல்லர் பூபால சிங்கம் நேற்று முன்தினம் (21.07. 2008) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் ஈஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான செல்லர் - குட்டிப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தங் கம்மா தம்பதியரின் மருமகனும், Dr.பூவேந்திரன் (U.S.A), ஜெயந்தி (U.K.), Dr.பாலேந்திரன் (U.K.), சாந்தி (Aust ralia), ரோகினி (Australia) ஆகியோரின் அன்புத் தந்தை யும், ரேகா, Dr.குகதாசன், Dr.கௌரி, Dr.விக்கினேஸ்வரன், காலஞ்சென்ற சாந்தகுமார் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லட்சுமி, அன்னலட்சுமி, குணலட்சுமி, தங்கலட்சுமி மற்றும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், இரா சலட்சுமிஆகியோரின் அன்புச் சகோதரனும், பரம்சோதி (இளைப்பாறிய ஆசிரியர்), விவேகானந்தன் (Canada), காலஞ்சென்றவர்களான இராதாகிருஷ்ணன், பாலசிங்கம் (Australia) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2008) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இல.27, 2ஆம் குறுக்குத்தெரு,* செ.பரம்சோதி
*யாழ்ப்பாணம்.* (மைத்துனர்).

## நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் 2008

### கால நீடிப்புச் செய்தல்

மேற்படி விடயம் சம்பந்தமாக 07.07.2008 ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தின்படி கேள்விகள் ஏற்றுக்கொள்ப்படும் இறுதித் திகதி 22.07.2008 ஆம் திகதியிலிருந்து 29.07.2008 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.12.30 மணி வரை கால நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன். அத்துடன் அன்றைய தினம் பி.ப.2.30 மணிக்கு ஆணையாளர் அலுவலகத் தில் கேள்விகள் திறக்கப்படும். 29.07.2008 மு.ப. 10.00 மணி வரை கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறி யத்தருகின்றேன்.

*மாநாகரட்சி மன்றம்,* மு.செ.சரவணபவ
*யாழ்ப்பாணம்.* மாநகர ஆணையாளர்,
*22.07.2008* யாழ்ப்பாணம்.

# தென்மராட்சியில் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

சாவகச்சேரி நகரில் ஏ- 9 வீதியின் மேற்குப் பகுதியில் நேற்றுக் காலைமுதல் படையினர் பெருமெடுப்பில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் சரமாரியான துப் பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன என் றும் -

அதனை அடுத்தே படையினர் தேடு தல் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என் றும் ஒரு தகவல் தெரிவித்தது.

படையினரின் சுற்றிவளைப்புத் தேடு தல் நடவடிக்கையின் போது பலர் விசார ணைக்குட்படுத்தப்பட்டனர்.

ஆனால் எவரும் கைது செய்யப்பட் டனரா என்பது குறித்துத் தகவல்கள் வெளியாகவில்லை.

(203-207)

## மின்மாற்றி மீது சூடு

யாழ்ப்பாணம், ஜூலை 23

தென்மராட்சி சாவகச்சேரி டச்சு வீதி முதலாம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஆயுததாரிகள் மின்மாற்றி ஒன்றை துப்பாக்கியால் சுட்டு சேதப்படுத் தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக சாவகச்சேரி வடக்கு, மண்டுவில், மருதடி ஆகிய பகுதிகளுக் கான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள் ளது.

நேற்றுக்காலை அப்பகுதிக்கு வந்த படையினரும் பொலிஸாரும் சேதமடைந்த மின்மாற்றியைப் பார்வையிட்டதுடன் அப் பகுதியில் உள்ள மக்களிடம் விசாரணை களை நடத்தினர். (1-203-207)

## வணிக பீடத்தின் விசேட மீள் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் விசேட மீள் பரீட்சைகள் அடுத்த மாதம் 4ஆம் திகதி ஆரம்பிக்க இருப்பதனால் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் பீடாதிபதி அலுவ லகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளனர். (1)

## சாரதி அனுமதிப்பத்திர செயன்முறைப் பரீட்சை வெள்ளி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற் கென நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை முடிவுகள் வெளியாகி உள்ளன.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த வர்களுக்கான செயன் முறைப் பரீட்சைகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்ப மாகவுள்ளன.

புதிய மோட்டார் சைக்கிள் பதிவுக்கான வாகனப் பரிசோதனையும் வழமைபோல் நடை பெற்று வருவதாக மோட்டார் போக்குவரத் துத் திணைக்கள யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்துள் ளார்.

எழுத்துப் பரீட்சை நடைபெற்ற திகதி களும் செயன்முறைப் பரீட்சைக்கு அழைக் கப்பட்ட திகதிகளும் வருமாறு.

| எழுதுப் பரீட்சை நடை பெற்ற திகதி | | செயன்முறைப் ப்ட்சை நடை பெறும் திகதி |
|---|---|---|
| 2008.06.17 | - | 25.07.2008 மு.ப 9.30 மணி |
| 2008.06.19 | - | 28.07.2008 மு.ப 9.30 மணி |
| 2008.06.24 | - | 29.07.2008 மு.ப 9.30 மணி |
| 2008.06.26 | - | 24.07.2008 மு.ப 9.30 மணி |
| 2008.07.15 | - | 22.07.2008 மு.ப 9.30 மணி |
| 2008.07.16 | - | 23.07.2008 மு.ப 9.30 மணி |


### சிக்கன மின்குமிழ்

60% - 80% வரையான மின்சார
சிக்கனத்தை ஏற்படுத்தும்
உத்தரவாதத்துடன் கூடிய மின் குமிழ்களை
(Energy Saving Bulbs) எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
Nidia Electronics,
205/7, Raja Theatre Complex


## மரண அறிவித்தல்கள்

### ஸ்ரீமதி மங்கையர்க்கரசி உமாகாந்தன்

ஸ்ரீமதி மங்கையர்க்கரசி உமாகாந்தன் 21.07.2008 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்தியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வல்வை வைத்தீஸ்வரன் தேவஸ்தான முன்னாள் பிரதமகுரு பிரம்மஸ்ரீ நீ.பரமேஸ்வரக் குருக்கள் - தாட்ஷாயினி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான முன்னாள் சிரேஷ்டகுரு பிரம்மஸ்ரீ சண்முகநாதக்குருக்கள் - சாந்தாதேவி தம்பதியினரின் மூதத மருமகளும் ஓய்வுபெற்ற தபாலதிபரும் உதயன் பத்திரிகை முன்னாள் உதவி ஆசிரியரும் மட்டக்களப்பு சர்வதேச செஞ்சிலுவை குழு முன்னாள் பரப்புரை உத்தியோகத்தருமான உமாகாந்தனின் மனைவியும் காலஞ்சென்ற மலர்மங்கை, வல்வை வைத்தீஸ்வரன் தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ மனோகரக் குருக்கள், மலரகித சர்மா ( மாவட்ட கூட்டு றவு அபிவிருத்தி உத்தியோகத்தர், வடமாகாண தலைமை அலு வலகம்) ஆகியோரின் சகோதரியும் ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர் ஸ்ரீதரன், ஓய்வுபெற்ற வயம்ப பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் சதானந்தன், காலஞ்சென்ற தி.கணேஸ்வரன், கௌரிபாலா, திருகோணமலை நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் காயத்திரி ஆகியோரின் மைத்துனியும், சிவசாந்தி (லண்டன்), வித் தியாசரனன், காலஞ்சென்ற வேணுகிருஷ்ணா ஆகியோரின் தாயும் தியாகராஜக் குருக்களின் (லண்டன்) மாமியாரும் லட்சுமிகாந்தன், லட்சுமி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.07.2008 இந்தியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும். (76532)

சிவன் கோயில், தகவல்:
வல்வெட்டித்துறை. பிரம்மஸ்ரீ மனோகரக்குருக்கள்
ஈமெயில் :umakanthan@gmail.com

### சுப்பன் யோகநாதன்



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பன் யோக நாதன் நேற்று (22.07.2008) செவ்வாய்க் கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற சுப்பன் மற்றும் முத்தி தம்பதியினரின் அன்பு மகனும், தன யோகவதியின் அன்புக் கணவரும், மணி வண்ணன் (பிரான்ஸ்), யசோதினி, பிறே மினி (பிரான்ஸ்), சசிவண்ணன் (பிரான்ஸ்), கயேந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரியா (பிரான்ஸ்), சுந்தரலிங்கம், செல்வச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், லக்சா, விதுஷா, நிதுஷன், சமீனா (பிரான்ஸ்) ஆகியோ ரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2008) புதன் கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் வடக்கு,* தகவல்:
*சண்டிலிப்பாய்.* (76585) குடும்பத்தினர்.

### ஆறுமுகம் சிவகுருநாதன் [சிவகுரு]



மண்டைதீவை பிறப்பிடமாகவும், புளியங் கூடல் தெற்கு, ஊர்காவற்றுறையை வசிப்பி டமாகவும் தற்போது நாச்சிமார் கோவிலடி, நவாலி வடக்கில் வசித்தவருமாகிய ஆறுமுகம் சிவகுருநாதன்(சிவகுரு) நேற்று (22.07.2008) அதிகாலை ஒரு மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறு முகம்- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சிவக்கொழுந்து தம்ப தியினரின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவ ரும் தாமரைவதனி(புளியங்கூடல்), அகிலன் (ஜேர்மனி), அருணன் (ஜேர்மனி) காலஞ்சென்ற சந்திரவதனி மற்றும் அரவிந்தன், அரிகரன்(நதியா நகைமாடம்) ஆகியோரின் அன் புத் தந்தையும் இந்திரன்(புளியங்கூடல்), ஜீவமலர் (ஜேர் மனி), கிருஷ்ணலீலா(ஜேர்மனி), கவிதா(நவாலி) ஆகியோ ரின் அன்பு மாமனாரும், சஜீவன், சஞ்சிகா , சோபிதன், சௌமியா (புளியங்கூடல்), .சஜித்(ஜேர்மனி), திருப்பிகா (ஜேர்மனி), சாருஜன் (ஜேர்மனி), ஆர்த்திகா (ஜேர்மனி) விஷ்ணுயா (நவாலி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.07.2008) செவ் வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரி யைகள் நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவிததலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நாச்சிமார் கோவிலடி நவாலி* தகவல்:
*வடக்கு,நவாலி.* (76586) சி.அரிகரன்(மகன்)

### திருமதி இலட்சுமிபிள்ளை சோமசுந்தரம் (இலட்சம்)



காரைநகர், கோவளத்தை பிறப்பிடமாகவும், அப்புத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிபிள்ளை சோமசுந்தரம் (இலட்சம்) நேற்று (22.07.2008) செவ்வாய்க் கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர் களின் அன்பு மனைவியும், கனகசுந்தரலிங் கம் (சுந்தரம் ஸ்டோர்ஸ் - அப்புத்தளை), அருளானந்தம் (சுந்தரம் ஸ்டோர்ஸ் - அப்புத்தளை), இராஜேந்திரம் (பிரான்ஸ்),திருநாவுக்கரசு (பிரான்ஸ்), நாகேஸ்வரி (பண்டாரவளை), லோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகாம் பிகை, ஜோதிமலர், இராஜேஸ்வரி, சசிலதா, கணேசன் (பிள்ளை யார் டிரேட் சென்டர், பண்டாரவளை), சிவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், செந்தில்குமார், சுபாங்கி, தனுஷன், விதுஷன், அருச்சுனா, பிரசன்னா, அபிசன்னா, உமா தர்ஷினி, அருள் செந்தில், தயானந்தன், அபிராமி, மதுசன், மதுரா ஆகி யோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (24.07.2008) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அப்புத்தளை நகர பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மகன்மார்:- சோ.கனகசுந்தரலிங்கம், சோ.அருளானந்தம்
(சுந்தரம் ஸ்டோர்ஸ் - அப்புத்தளை). 057-2268311

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் உள்ள கிராமங்கள் தோறும் குடியிருப்பாளர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன

குருநகர், ஜூலை 23

குடாநாட்டிலுள்ள கிராமங்கள் தோறும் குடியிருப்பாளர்களுக்கு கிராம சேவகர்களால் குடியிருப்பாளர் விவரங்கள் திரட்டுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இவ்விவரப்பட்டியல்களில் குடியிருப்பாளரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், குடியிருப்பாளரின் வீட்டு முகவரி, பொலிஸ் பிரிவு, குடும்ப அங்கத்தவர்விவரம், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள், பிரதான குடியிருப்பாளருடனான உறவுமுறை, வீட்டு உதவியாளர் உட்பட ஏனைய குடியிருப்போர் விவரங்கள் ஆகியவைகளை நிரப்பி ஒப்புமிடுமாறு கோரப்பட்டுள்ளது.

வீட்டு உதவியாளர் உட்பட ஏனைய குடியிருப்போர் விவரத்தில் வீட்டில் தற்காலிகமாக தங்கியுள்ளவர்களின் விவரங்களும் கோரப்பட்டுள்ளன. இப்படிவம் மூன்று மொழிகளிலும் உள்ள போதும் ஆங்கிலத்திலேயே பூரணப்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (202-51)

## தென்மராட்சிப் பிரதேச முதியோருக்கு அ.அட்டை

யாழ்ப்பாணம், ஜூலை 23

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் முதியோர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த அனைவரின் அடையாள அட்டைகளும் வந்துள்ளன. முதியோர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் தமது அடையாள அட்டையினைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் கேட்டுள்ளார். (202-207)

## வடமராட்சிப் பகுதியில் சுகாதாரக் குறைபாட்டுடன் உணவு நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 23

வல்வெட்டித்துறை, புலோலி, அல்வாய் பிரதேசங்களில் இயங்கும் உணவு கையாளும் நிலையங்கள் சுகாதாரக் குறைபாட்டுடன் இயங்கி வருவதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக உணவு மருந்துப் பரிசோதாகர் க.மகாதேவன் தெரிவித்தார்.இவைகளில் சுகாதாரச் சீர் கேடுகளை நீக்கி சரியான முறையில் உணவைத் தயாரித்து மக்களுக்கு வழங்க இப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார். (202-300)

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**

# நகரப் பகுதிகளில் சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்பட்ட குளிர்பானவகைகள் அழிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்.பஸ் நிலையப்பகுதி, வண்ணார் பண்ணை, குருநகர் ஆகிய பிரதேசங்களில் சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது சுகாதாரமற்ற முறையில் குளிர்பான வகைகள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டு உற்பத்திப் பொருள்கள் அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் உற்பத்தியாளர்களும் , விற்பனையாளர்களும் எச்சரிக்கப்பட்டனர்.

யாழ். மாநகர பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் மேற்படி பிரதேசங்களில் திடீர் பரிசோதனையில் ஈடுபட்டனர். அதன்போது குருநகர், கடற்கரை வீதியில் சுகாதாரமற்ற முறையில் மரநிழலில் சர்பத் வியாபாரம் செய்தமை மற்றும் குருநகரில் பாங்ஷால் வீதி, சந்தைப் பகுதி, சென் பற்றிக்ஸ் வீதி ஆகிய இடங்களில் அனுமதியற்று யூஸ் உற்பத்தி செய்தமை கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக விற்பனை செய்யப்பட்ட சர்பத் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

பஸ் நிலையம் முன்பாகவும் விற்பனை செய்யப்பட்ட பழுதடைந்த பழவகைகள், உணவுப் பொருள்கள் என்பன கைப்பற்றப் பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

வண்ணார் பண்ணைப் பகுதியில் அனுமதியற்று தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த யூஸ் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

அனுமதியற்று விற்பனை செய்யப்படும், மனித பாவனைக்கு உதவாத பொருள்க ளைக் கொள்வனவு செய்வதில் பொதுமக் கள் விழிப்பாய் இருக்கவேண்டும் என யாழ். மாநகர சபை சுகாதாரவைத்திய அதிகாரி கேட்டுள்ளார். (202)

# நகைகள் இருந்த இடத்தைக் காண்பிக்க மறுத்த பெண்ணைத் தாக்கிவிட்டு ஆயுததாரிகள்கொள்ளை

## நவாலியில் நள்ளிரவில் அட்டகாசம்

நவாலி, ஜூலை23

நவாலியில் நள்ளிரவு வேளை வீடொன்றுக்குள் ஆயுதங்களுடன் புகுந்த திருடர்கள் வீட்டிலிருந்த பெண்ணை தாக்கி விட்டு பெறுமதிமிக்க நகைகள், பணம் என்பவற்றை எடுத்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது:- நேற்று முன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு 12.15 மணியளவில் நவாலி பிரசாத் வீதியிலுள்ள வீடொன்றினுள் நுழைந்த திருடர்கள் பூட்டியிருந்த சுருக்குக் கதவை திறக்குமாறும் இல்லையேல் சுடுவோம் என்றும் மிரட்டவே கதவு திறந்து விடப்பட்டது.

### காயமுற்ற பெண்ணை இராணுவத்தினர் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்

அதனை தொடர்ந்து வீட்டிலிருந்த பெண்ணிடம் நகைகள் இருக்கும் இடத்தைக் காட்டுமாறுகேட்டு அவர் மறுத்ததைத் தொடர்ந்து அவர்களிடமிருந்த கைக்கோடரி, வாள் என்பவற்றால் பலமாக தாக்கினர். பின் நகைகள் இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து அங்கிருந்த சுமார் 5 லட்சம் பெறு மதியான நகைகள் பணம் என்பவற்றை எடுத்துள்ளனர்.

இதன் பின் அப்பெண்ணின் தாய் அணிந்திருந்த தோடு, மோதிரம் என்பவற்றை தருமாறு வற்புறுத்தவே சத்தம் கேட்டு அயலவர்கள் இராணுவத்தினருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்களுடன் அங்கு இராணுவத்தினர் வந்தபோது பெண் அணிந்திருந்த நகைகளையும் அறுத்துக்கொண்டு பின் பக்கத்தால் திருடர்கள் ஓடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வேளை தாக்குதலுக்குள்ளாகி பலத்த காயங்களுடன் இருந்த சம்பந்தப்பட்ட பெண்ணை இராணுவத்தினரின் உதவியுடன் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதானா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொள்ளையர்கள் கொண்டுவந்த வாள், கைக்கோடரி, தொப்பி என்பனவற்றை அவ் வீட்டில் விட்டுச் சென்றுள்ளனர். (202-100)

# வடக்கு கல்வி அபிவிருத்தி குறித்து கல்வியமைச்சில் உயர்மட்ட மாநாடு

## அமைச்சர் டக்ளஸின் கோரிக்கையின் பேரில்

கொழும்பு, ஜூன் 23

வடமாகாண கல்வித்துறை அபிவிருத்தி தொடர்பான உயர்மட்ட மாநாடு ஒன்று கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையில் நேற்று முன்தினம் பத்தரமுல்லை, இசுறுபாயாவில் உள்ள கல்வியமைச்சில் இடம்பெற்றது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சரும் வடமாகாணத்துக்கான விசேட செயற்பாட்டுக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையின் பேரில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த மாநாட்டில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விசேட செயற்பாட்டுக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடமாகாண கல்விப் பணிப்பாளர், வட மாகாண மற்றும் மத்திய கல்வி அமைச்சுக்களின் உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் வட மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் நியமனங்கள், நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள், வட மாகாணத்திற்கான பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் வரையில் தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை பிற்போடுதல், வடமாகாண கல்வித்துறை சார்ந்த நிறுவனங்களுக்கு சீ.டீ.எம்.ஏ. தொலைபேசிகளை வழங்குதல், இலவசப் பாடசலை புத்தகங்கள் விநியோகம், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அதிபர் சேவையில் சேவை நீடிப்பு மற்றும் ஓய்வு பெறச் செய்தல் தொடர்பான அதிகாரப் பகிர்வு, கல்வியியல் கல்லூரி நியமனங்கள், தேசிய கல்வி நிறுவனத்தின் தமிழ்ப் பிரிவினை ஆரம்பித்தல், அதற்கான பயிற்சிகளை வலுவூட்டுதல், அதிபர் நியமனம், பாடசாலைகளுக்கான இரசாயன பொருள்கள் விநியோகம், தேசிய பாடசாலைகளுக் கான சிற்றூழியர்கள் நியமனம், க.பொ.த. உயர் தர மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகளை நடாத்துதல் போன்ற பல விடயங்கள் குறித்து விரிவாக ஆரா யப்பட்டு இணக்கங்கள் காணப்பட்டதுடன் இவற்றுக்கான நிதி உதவிகளை திறைசேரியுடன் கலந்துரையாடிபெற்றுக் கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ-1)

## தென்மராட்சி வலயத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்றுக் கடமையாற்றும் ஆசிரியர்களின் சேவை விவரங்கள் கல்வி அமைச்சால் கோரப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் படிவங்களை வலய அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவில்பெற்று எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் விவரங்களைப் பதியுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கேட்டுள்ளார்.

இதேவேளை, மேற்படி ஆசிரியர்களுக் கான ஜூலைமாத சம்பளம் வழங்கப்படவுள்ளது.

எனவே இன்று அல்லது நாளை வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமுகமளித்து கையொப்பமிடுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (202-207)

# கணனி அறிவு பின்னிப் பிணைந்துள்ள மனித வாழ்வில் தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற வேண்டியது அவசியம்

## ஐ.ஐ.எஸ். நிறைவேற்று அதிகாரி கூறுகிறார்

நல்லூர், ஜூலை 23

கணித அறிவு போன்று கணனி அறிவும் பின்னிப் பிணைந்துள்ள இன்றைய மனித வாழ்வில் தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற வேண்டியது கட்டாயமாகும். இதில் இருந்து எவரும் விலகிவிட முடியாது.

ஐ.பி.எம்.எஸ். நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய ஐ.ஐ.எஸ். குறுப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி கு.விக்னேஸ் இவ்வாறு கூறினார்.

ஐ.ஐ.எஸ் சிற்றி கொம்பிளெக்ஸ் மண்டபத்தில் நிறுவன இயக்குநர் திருமதி ஜெயஜோதி விக்னேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கு.விக்னேஸ் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

தகவல் தொழில் நுட்பக் கல்வியின் முக்கியத்துவம் இன்று சர்வதேச மட்டத்தில் உணரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு துறையிலும் அதைப் பயன் படுத்திக் கொள்கிறார்கள்.

இன்றைய இக்கட்டான கால கட்டத்தில் எமது எதிர்காலத்தின் பயன்கருதி மாணவர்களும் அதில் தேர்ச்சி பெற்றவர்களாக, அறிவு மிக்கவர்களாக தம்மை மாற்றிக் கொள்ள வேண்டிய தேவை உண்டு.

யாழ்.குடாநாட்டு மாணவர்களுக்கு தகுதியான எதிர்காலத்தை உருவாக்கக் கூடியதாக விரைவில் நாங்கள் ஒரு பொறியியல் கல்லூரியை நிறுவவுள்ளோம்.

தற்சமயம் இரண்டு வருட கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் பிரித்தானிய பல்கலைக்கழகமான சல்போட்டில் (SALFORD) கல்வியைத் தொடர முடியும்.

இது சர்வதேச சான்றிதழையும் நவீன கட்டட அறிவையும் பெற வாய்ப்பளிக்கின்றது.

இந்தத் தொழில்நுட்ப வளர்ச்சியினூடாக நாமும் நமது சமுதாயமும் வளர்ச்சிப் பாதையில் நடைபோட முடியும்- என்றார். (203-111)




ஐ.பி.எம்.எஸ். நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா ஐ.ஐ.எஸ்.சிற்றி கம்பஸ் மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிர்வாக இயக்குநர் திருமதி வி.ஜெயஜோதி உரையாற்றுவதை முதலாவது படத்திலும் பிரதம விருந்தினராக நிகழ்வில் கலந்து கொண்ட கு.விக்னேஸ் மாணவி ஒருவருக்குச் சான்றிதழ் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

நிர்வாக இயக்குநர் திருமதி. வி. ஜெயஜோதி, நிலைய முகாமையாளர் அன்ரன் கிறிஸ்ரியன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஜெயந்தினி, பிரதம விருந்தினர் கே.விக்னேஸ், சிற்றி கம்பஸ் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.[illegible] ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org












கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய அதிபர் த.கந்தையாவின் மணிவிழா நிகழ்வுகளின் சில காட்சிகள்.

விழா நாயகனுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதை முதலாவது படத்திலும் விழாவில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா உரை நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்தில் காணலாம்.

வித்தியாலய பிரதி அதிபர் திருமதி செ.ஜெகநாதன், சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சத்தியநாதன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை அடுத்துள்ள படங்களில் காணலாம்.

ஐந்தாவது படத்தில் விழா நாயகனும் பாரியாரும் அமர்ந்துள்ளனர். *(படங்கள்: அருணன்)*


## திருமறைக் கலாமன்றம்
## கலைத்தூது அழகியல் கல்லூரி
### ஆங்கிலமொழிக் கற்கைநெறி

க.பொ.த. (சா/த)/ (உ/த) சித்தி அடைந்தவர்களுக்கும், அலுவலக உத்தியோகத்தவர்களுக்குமான ஆறுமாதகால ஆங்கில மொழிக் கற்கைநெறிகள் (Spoken உட்பட) எமது கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளன.

விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விவரங்களையும் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

*'கலைக்கோட்டம்'*
*இல. 128, டேவிட் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே. 021 222 9419*

தொடர்புகளுக்கு:
அதிபர்,
கலைத்தூது அழகியல் கல்லூரி.




# IBMS
## Online Courses

ஆரம்பம்
26/07/2008

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES


## மரண அறிவித்தல்
## *இளையதம்பி ஜெகநாதன்*
*(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)*



சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் 122, செம்மணி வீதியில் வசித்தவரும் தற்போது தோப்பு, அச்சுவேலியில் வசித்தவருமான இளையதம்பி ஜெகநாதன் நேற்று (22.07.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- இளையப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான புஸ்பவதி, பஞ்சாட்சரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், சுபாஜினியின் பாசமிகு தந்தையும், பிரணவனின் அன்பு மாமனும், தேசாஸ்வினியின் அன்புப் பேரனும், முருகையா - சந்திராதேவி ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2008) வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் அச்சுவேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தோப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தோப்பு,*
*அச்சுவேலி.*

தகவல்:
*ஜெ.நாகரத்தினம்*
(மனைவி).



உ
வேலணை வங்களாவடி
அருள்மிகு ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத
முருகப் பெருமானின் சர்வதாரி வருஷ
**மஹோற்சவ விஞ்ஞாபனம்**

முருகன் மெய்யடியார்களே!

தன்னை நாடிவரும் அடியார்களின் துயர்களைக் களைந்து அருள் பாலித்து வரும் ஸ்ரீவள்ளி தேவசேனா முருகப்பெருமானுக்கு நிகழும் மங்களகரமான சர்வதாரிவருஷ ஆடிமாதம் 8ஆம் நாள் 23.07.2008 புதன்கிழமை கொடியேற்றத்திருவிழா மு.ப. 10 மணிக்கு நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

ஆடி 14ஆம் நாள் (29.07.2008) 7ஆம் திருவிழாவான வேட்டைத் திருவிழா பி.ப.2மணிக்கு வேலணை இலந்தவனம் சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும்.

ஆடி 15ஆம் நாள் (30.07.2008) 8ஆம் திருவிழா -
சப்பரத் திருவிழா பி.ப.3 மணிக்கு
ஆடி 16ஆம் நாள் (31.07.2008)
தேர்த்திருவிழா மு.ப.10 மணிக்கு
ஆடி 17ஆம் நாள் (01.08.2008)
தீர்த்தத் திருவிழா காலை 9 மணிக்கு- சாட்டி வெள்ளக் கடக்கரை.
ஆடி 18 ஆம் நாள் (02.08.2008)
108 சங்காபிஷேகம் - மாலை திருக்கலியாண வைபவம்
ஆடி19ஆம் நாள் (03.08.2008)
வைரவர் பொங்கல்
தொடர்ந்து 11 நாள்களும் மகேஸ்வர பூசை நடைபெறும் (அன்னதானம்).

மேற்படி பெருவிழாவிலும் அதற்கு முன் பின் நடைபெறும் கிரியைகளிலும் கலந்து முருகப் பெருமானின் அருள் ஆசிகளைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வீர்களாக.

**பரிபாலன சபையினர்,**
**உபயகாரர்.**

(76577)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி
## திருமதி சிவலிங்கநாதன்
## கங்காதேவி

தோற்றம்: 22.10.1951



மறைவு: 23.06.2008

அம்மா.......!
நீங்கள் எமைவிட்டுப் பிரிந்து
மாதமொன்றாகிவிட்டது
ஆனால்,
உங்களின் நினைவுகள்
எம்மனதை விட்டு அகலுமோ
எம் மனம்தான் ஆறிடுமோ
தாயே!
உம் குழந்தைகள்
மும்மணிகளும் கரங்கூப்பி
வேண்டுகின்றோம்
எம்மைக் காண வாராய்!

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல தெல்லிப்பழை துர்க்கை அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

19, [illegible] வீதி,
[illegible]ணை, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 300 அடியுள்ள ஈஃபிள் கோபுரம்

1889ஆம் ஆண்டு கொண்டாடப்பட்ட பிரெஞ்சுப் புரட்சியின் நூற்றாண்டு விழா நினைவாக கட்டப்பட்டதே ஈபிள் கோபுரம்.

பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில் இந்தக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. புகழ்பெற்ற பொறியியல் நிபுணரான அலெக்ஸாண்டர் குஸ்டாவ் ஈஃபிள் என்பவரே 3 ஆண்டுகளில் இந்தக் கோபுரத்தைக் கட்டி முடித்தார். துருப்பிடிக்காத இரும்பால் நவீன தொழில்நுட்பத்திறனைப் பயன்டுத்தி இது அமைக்கப்பட்டுள்ளது.

300 அடி உயரமுள்ள இந்தக் கோபுரத்தின் உச்சிவரை செல்ல ஆயிரத்து 800 படிகள் உள்ளன. 'லிப்ட்' வசதியும் உண்டு. இந்தக் கோபுரத்தின் உச்சியில் அமைக்கப்பட்டுள்ள 'அன்டெனா' வானொலி, தொலைக்காட்சி என்பவற்றின் ஒளி, ஒலி பரப்புகளுக்கு உதவுகின்றது.

தாவடி. *தாசன்.*

# அழகு மிளிரும் குடைகள்



பண்டைய காலங்களில் ரோமானியப் பெண்கள் குடையைப் பயன்படுத்தி வந்தார்கள். குடைபிடிக்கும் வழக்கத்தை ஆரம்பித்து வைத்தவர்களும் அவர்கள் என்றே கருதப்படுகின்றது.

வெளியே செல்லும்போது மழையினாலோ, காற்றினாலோ தங்கள் கூந்தல் அலங்காரங்கள் கலைந்து போகாமல் இருப்பதற்காக அவர்கள் குடைகளைப் பயன்படுத்தியுள்ளார்கள். முரட்டுத் துணிகளினாலும் தோல்களினாலும் செய்த குடைகளே பயன்படுத்தப்பட்டன. துணியாலான குடைகளை முதன் முதலாகப் பயன்படுத்தியவர்கள் இத்தாலியர். கி.பி.16ஆம் நூற்றாண்டிலேயே இத்தாலியர் குடைகளைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். 1850ஆம் ஆண்டிற்குப் பின்னர் கறுப்புத்துணி, இரும்புக்கம்பிகள் என்பவற்றைப் பயன் படுத்தி குடைகள் தயாரிக்கப்பட்டன. 1911 ஆம் ஆண்டு முதல் பட்டு, ரேயான் ஆகிய துணிகளைப் கொண்டும் குடைகள் தயாரிக்கப்பட்டன.

உளரெழு. *சத்தியன்.*

# கற்காலமும் அதன் வளர்ச்சியும்

வரலாற்றுக்கு மிகமிக முந்திய காலத்தில்- மனிதன் எழுத வாசிக்க அறிந்திருக்காத காலத்தில் கற்காலம் என்று ஒரு காலம் இருந்துள்ளது.

மனிதன் குறைந்தது 500 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பூமியில் வாழ்ந்துவிட்டான். ஆனால் சுமார் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அவன் எழுதத் தொடங்கவில்லை. எனவே வரலாற்றுக்கு முந்திய காலம் என்பது மிக நீண்டதொரு காலத்தைக் குறிப்பதாகும்.

இந்தக் காலப்பகுதியிலேயே மனிதன் கற்களாலான ஆயுதங்களைத் தயாரித்து பயன்படுத்தலானான். அதனால்தான் அதனை கற்காலம் என அழைக்கின்றோம். இதன் ஆரம்ப காலம் பழைய கற்காலம் என்றழைக்கப்படுகின்றது. முதலில் தயாரிக்கப்பட்ட கல்லாயுதங்கள் பெரிய கற்களை செதுக்கி எதையும் வெட்டக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன. கற்களால் செய்த கோடரிகள் மற்றும் கை ஆயுதங்களையே பல ஆயிரம் ஆண்டுகாலம் மனிதன் பயன்படுத்தி வந்துள்ளான்.

பின்னர் வந்த பனிப்படர்ஷ ஊழியின் போது (Ice Age) ஐரோப்பாவில் ஒரு வகை மக்கள் வாழ்ந்துள்ளார்கள். இவர்களை நீந்தர்தல் மக்கள் என விஞ்ஞானிகள் அழைப்பர். அதன் பின் குரோ - மக்னொன் மக்கள் (Cro-Magnon Men) தோன்றினர். இவர்கள் மிகவும் முன்னேறிய நிலையில் காணப்பட்டுள்ளனர். இவர்களிடம் எல்லா வகை ஆயுதங்களும் இருந்துள்ளன. ஈட்டி முனைகள், கத்திகள், சுரண்டிகள் போன்றவையே அவையாகும். அவர்களும் வேட்டையாடுபவர்களாகவே இருந்துள்ளனர்.

ஏறத்தாழ கி.மு.6000 ஆண்டளவில் மனிதவாழ்வில் பெருமாற்றம் ஒன்று ஏற்பட்டது. பயிர்ச்செய்கையை அவன் அறிந்து கொண்டான். இது புதிய கற்காலத்திற்கு வழிகோலியது. மிருகங்களை உணவாகக் கொண்டதுடன் அதன் தோலை உடையாக ஏற்றுக்கொண்டான். இயற்கைப் பொருள்களைக் கொண்டு புதிய பொருள்களை உருவாக்கிக்கொள்ளவும் தொடங்கினான். மிருகங்களை மந்தைகளாக வளர்க்கவும் வீடுகள் கட்டிக்கொள்ளவும் தொடங்கிய அவன் விரைவிலேயே இயற்கையில் காணப்படாத பொருள்களையும் தயாரிக்க ஆரம்பித்தான்.

களிமண்ணைக் கொண்டு கோப்பைகளும் பாத்திரங்களும் செய்தான். அவைகளை சுட்டு எடுத்து உணவை அவித்து சாப்பிடப் பயன்படுத்தினான். ரோமத்தைக் கொண்டும் சணலைக் கொண்டும் கயிறு திரித்து ஆடை செய்யத் தொடங்கினான். மனிதன் ஒன்றாக சேர்ந்து வேலை செய்யத் தொடங்கியதும் கிராமங்களும் நகரங்களும் தோன்றலாயின. இந்த வளர்ச்சிதான் நாம் இன்று காணும் நாகரிகத்துக்கு வழிகண்டது.

*-ரங்கன்.*



# வெளவாலைப் பற்றித் தெரியுமா?



பொதுவாக பகல் பொழுதில் சுவரில் தலைகீழாகத் தொங்கும் வெளவாலையும், இரவில் பொந்தினுள் தலையை நீட்டும் வெளவாலையும், அந்திப் பொழுதில் வேகமாக இறக்கைகளை அடித்துப் பறக்கும் வெளவாலையும் எல்லோரும் பார்த்திருப்பார்கள். அவ்வளவுதான்! அதற்கு மேல் வெளவாலைப் பற்றி அதிகம் தெரிந்திருக்காது.

வெளவால் தோன்றி சுமார் 5.3 கோடி ஆண்டு கள் ஆகின்றன!

மரங்களில் வசித்த பறவைகளிலிருந்து வெளவால் தோன்றியிருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது. வெளவால் பறவை போல் பறந்தாலும் பிராணிஇனத்தைச் சார்ந்ததுதான். அதற்குக் காரணம் பெண் வெளவால் குட்டிகளை ஈன்று பாலூட்டுகிறது.

வெளவாலின் உடல் முழுவதும் ரோமம் அடர்ந்திருக்கும். வெளவாலுக்கு பறப்பதற்கென இறக்கைகள் தனியாக இல்லாவிட்டாலும் அதன் கரங்கள் பறப்பதற்கு ஏற்றாற் போன்று விசித்திர அமைப்பை கொண்டவை. அதனால்பறவைகளைப் போலவோ பிராணிகளைப் போலவோ கால்களை ஆதாரமாகக் கொண்டு வெளவாலால் நிற்க முடிவதில்லை. எனவே உள்ளங்கால்களின் உட்பக்கம் மடிப்புகளின் உதவியைக் கொண்டு மேற் கூரையில் தலைகீழாகத் தொங்குகிறது.

வெளவாலில் சுமார் 1000 வகைகள் உள்ளதாகவும், அவற்றில் இந்தியாவில் மட்டும் 100 வகை வெளவால்கள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இரை தேடப் புறப்படும் வெளவால் மனிதர்கள் கேட்கமுடியாத மிக மெல்லிய ஓசையை எழுப்புகிறது. அதனால் கலவரமடைந்த கொசுக்கள், மிகச் சிறிய வண்டுகள், பூச்சிகள் எல்லாம் இருட்டில் பறக்க ஆரம்பிக்கின்றன. மிக மெல்லிய ஒலியை எழுப்பவல்ல வெளவாலால் மிக நுண்ணிய ஒலியைக் கேட்க முடியும். எனவே சலனமடைந்த கொசுக்கள், வண்டுகள், பூச்சிகள் ஆகியவற்றின் அசைவுகளால் வெளிப்படும் ஓசையை காதுகளால் கேட்கும் அதே நேரத்தில் அதிநுட்பமாக நுகரும் சக்தியையும், மோப்பசக்தியையும் கொண்ட மூக்கின் உதவியால் இரை இருக்கும் இடத்தை எளிதாக அடைந்து விடுகிறது.

ஒவ்வொரு இரவிலும் கணிசமான அளவு கொசு, வண்டு, பூச்சி ஆகியவற்றை வெளவால் தின்று விடுகிறது. வெளவால் மட்டும் இல்லையென்றால் உலகில் சிறு பூச்சிகள், வண்டுகள், கொசுக்களின் பெருக்கம் கட்டுக் கடங்காமல் போய் விடக்கூடும் என்கிறார்கள் நிபுணர்கள்!

சில வெளவால் இனங்கள் பழங்களைத் தின்று வாழும்.

இரத்தத்தை உறிஞ்சும் ஒரு வகை வெளவால் அமெரிக்காவில் காணப்படுகிறது.

அது கரப்பான் பூச்சி, தேள், பல்லி, சுண்டெலி, சிட்டுக் குருவி போன்றவைகளைப் பிடித்து இரத்தத்தை உறிஞ்சிக் குடித்துவிடும் என்று கூறப்படுகிறது.

புதன் பொய்கை

# சிறைச்சாலைகளின் தோற்றம்

சிறைச்சாலை முதன்முதலில் 15ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதாவது 1403 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் கட்டப்பட்டது. 1551ஆம் ஆண்டு முதல் கடன்காரர்களையும், பிச்சைக்காரர்களையும், குடும்பத்தில் தொந்தரவு செய்பவர்களையும் தண்டிக்கும் நோக்குடனே ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் சிறைச் சாலைகளை அமைத்தார்கள்.

15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எதிரிகளைத் துன்புறுத்துவதற்காகச் சிறைச்சாலைகளை அமைத்தார்கள். 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் குற்றஞ் செய்தவர்களை சிறைச்சாலைகளில் அடைக்கும் முறையும் பெரிய குற்றம் செய்தவர்களுக்கு மரண தண்டனை வழங்கும் முறையும் ஆரம்பமானது. உலகின் மிகப்பெரிய சிறைச்சாலை ரஷ்யாவில் உள்ள கார்தோவ் சிறைச்சாலை ஆகும். இங்கு ஒரே நேரத்தில் 45 ஆயிரம் கைதிகளை அடைத்து வைக்க வசதிகள் உள்ளன. ஸார்க் என்னும் தீவில் உலகின் மிகச்சிறிய சிறைச்சாலை உள்ளது. இங்கு ஒரே சமயத்தில் இருவரை மட்டுமே அடைத்து வைக்க முடியும்.




# ஹெலிகொப்டரின் பிறப்பு

ரஷ்யாவின் கீவ் என்னும் ஊரில் பிறந்த இகார் சிகார்ஸ்க்கி என்பவர்தான் முதன்முதலில் ஹெலிகொப்டரை உருவாக்கினார்.



ஆகாய விமானங்கள் மேலே ஏறுவதற்கும் இறங்குவதற்கும் ஓடு பாதை தேவை. ஓடு பாதை இல்லாமல் - இல்லாத இடங்களில் செங்குத்தாக மேலே கிளம்பவும், அதேபோல செங்குத்தாகவும் இறங்கக் கூடியது மான விமான அமைப்பை உருவாக்க முயன்றதன் பலனே ஹெலிகொப்டர். ரஷ்யப் புரட்சியினால் சிகார்ஸ்கி அமெரிக்காவிற்குச் சென்றார். அங்கே அவருக்கு விமானத் தயாரிப்பு நிறுவனம் ஒன்றில் வேலை கிடைத்தது. அந்த நிறுவனத்தில் 1929ஆம் ஆண்டில் மிகப் பெரிய விமானம் ஒன்றை தயாரித்தார்.

தனது கனவான ஹெலிகொப்டரை உருவாக்கும் முயற்சிக்கென 1929ஆம் ஆண்டு தொடக்கம் 1942 வரை ஆராய்ச்சியில் ஈடுபட்டார். 1939 ஆம் ஆண்டு V.S 300 என்னும் ஹெலிகொப்டரைத் தயாரித்தார். 1942 ஆம் ஆண்டு Rx4 என்னும் முதல் இராணுவ ஹெலி கொப்டரை உருவாக்கினார்.

# சமத்துவம்


பெரும் வள்ளல்களின்
வரிசையில்
நானும் ஒருவன்.
மேலதிகமாக
பிச்சை கிடைக்கும்
நாள்களில்.

வி.முகிலன்,
நெடுந்திவு.

# கொடி: அதன் மகத்துவம் என்ன?

துணியிலே தயாரிக்கப்பட்ட ஓர் அடையாளம் அல்லது குறியீடே கொடி எனப்படுகின்றது. ஒரு நாட்டின் அல்லது ஓர் அமைப்பின் அடையாளத்தை வெளிப்படுத்துவதாகக் கொடி உருவாக்கப்படுகின்றது.

ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் தான் கொடி உருவாக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. எதிரிகளிடமும் நண்பர்களிடமும் தம்மை அடையாளப்படுத்தும் தேவைக்காகக் கொடி உருவாக்கப்பட்டிருக்கலாம். அதாவது சண்டை நடைபெறும் இடங்களில் ஓர் அணி தம்மை அடையாளப்படுத்துவதற்காகக் கொடி உருவாக்கப்பட்டது எனக் கருதப்படுகின்றது. முதலாவது கொடி மிருகங்களின் தோல் அல்லது பறவைகளின் செட்டைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கலாம்.



துணியிலான முதலாவது கொடியை சீனாவும் கிழக்கு இந்தியாவும் பயன்படுத்தியுள்ளன. சீனா கி.மு. 1100 வருடங்களுக்கு முன்னர் துணியிலான கொடியைப் பயன்படுத்தியுள்ளதாக அறியப்படுகின்றது. தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில் உயர்குடியினர் அல்லது அரச குடும்பத்தினர் கொடிகளைப் பயன்படுத்தி வந்தனர்.

உலகில் முதன் முதலாக கொடியைத் தேசிய சின்னமாக டென்மார்க்கே ஏற்றுக்கொண்டது. 1218ஆம் ஆண்டில் தனது தேசியக்கொடியை அறிவித்தது. 1339ஆம் ஆண்டில் சுவிற்சர்லாந்தும் தொடர்ந்து அமெரிக்கா, பிரெஞ்சு ஆகிய நாடுகளும் 1805ஆம் ஆண்டு இத்தாலியும் தமது நாடுகளுக்கான தேசிய கொடிகளை அமைத்துக் கொண்டன. இலங்கையும் இந்தியாவும் சுதந்திரம் [illegible] தமது தேசியக் கொடிகளை அமைத்துக் கொண்டன. இலங்கையில் அப்போது ஆட்சி அமைத்துக்கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி இலங்கைக்கான தேசியக் கொடியை உருவாக்கி நாடாளுமன்றின் அங்கீகாரத்திற்காக முன்வைத்தது. அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்[illegible] அடுத்து இன்று வரை அக்கொடியே தேசியக் கொடியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிக்காய் விலை வீழ்ச்சியடைந்தது

குருநகர், ஜூலை 23

திருநெல்வேலி மரக்கறிச் சந்தையில் தேசிக்காய் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. ஒரு கிலோ தேசிக்காய் ரூபா 40 ஆக விற்பனை செய்யப்படுகிறது. எனினும் இந்தச் சந்தையில் வியாபாரிகளால் விற்பனை செய்யப்பட்டு வரும் தேசிக்காய்கள் பெரும்பாலானவை பழுதடைந்த நிலையில் காணப்படுவதாகப் பாவனையாளர்கள் கவலை தெரிவித்தனர். (1-51)

## உணவுப் பொருள்களைப் பதனிடும் பயிற்சி வகுப்பு வலி.மேற்கில்

யாழ்ப்பாணம், ஜூலை23

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் மேற்குப் பிரதேச சபையால் இன்று புதன்கிழமை 'ஏணி' நிறுவனத்தால் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி உணவுப் பொருள்களைப் பதனிடும் பயிற்சி வகுப்பு ஒன்று நடத்தப்படவுள்ளது.

## புத்தாக்குநர் ஆணைக்குழுவின் நேர்முகத்தேர்வு பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஜூலை 23

இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழுவின் தேசிய விருது வழங்கும் போட்டிக்கான நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 1,3,4,5 ஆகிய திகதிகளில் கொழும்பில் நடைபெற இருந்த மேற்படி போட்டிப் பரீட்சைக்கான நேர்முகத்தேர்வு செப்ரெம்பர் 4,5,6,7 ஆகிய திகதிகளில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.மாவட்ட மட்டத்தில் 2008 ஆம் ஆண்டுக்கான சகல புத்தாக்கங்களுக்கான தெரிவுப்போட்டிகளும் செப்ரெம்பர் 10,11 ஆம் திகதிகளில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது என்று யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (203)

## 1 வது பிறந்தநாள் வாழ்த்து





உடுப்பிட்டி, இமையாணன் மேற்கைச் சேர்ந்த
தனரஞ்சன் ஜெயந்திமாலா தம்பதியினரின்
செல்வப் புதல்வன் தக்சஜன் தனது 1ஆவது பிறந்தநாளை
இன்று (23.07.2008) புதன்கிழமை தனது இல்லத்தில்
சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை
அன்பு அப்பா, அம்மா, அக்கா (பர்மிகஷா), அண்ணா (தர்சஜன்),
அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா (ஐயா), அம்மம்மா, வானு சித்தா,
இத்தாலியில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அக்காமார்,
அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், துசித்தா மச்சாள்,
பாபு மாமா, பாட்டிமார், பெரியன்ரா, குட்டி அம்மையா குடும்பம்
கவின் தங்கா அம்மையா குடும்பம், சாந்தி அம்மையா குடும்பம்
ஜெர்மனி பேபி மாமா குடும்பம், இத்தாலி தேவா மாமா குடும்பம்
மற்றும் அனைவரும் இறைவன் துணையுடன் சகல
சௌபாக்கியங்களும் பெற்று நீடூழிவாழ்கவென
வாழ்த்துகிறார்கள்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

**அமரர் மரியநாயகம் அலோசியஸ்**

மலர்வு: 05.07.1981 உதிர்வு: 23.07.2007




நீ
எங்கள் நினைவுகளில்
நிறைந்தவன்...
சேர்ந்து பணி செய்த
காலங்கள் மறக்காது...
காலன் செய்த சதி
பாதியிலே பறந்தாயோ...?
ஆண்டொன்று கடந்தாலும்
ஆறாதடா எம் துயரம்...

என்றென்றும் உன் நினைவுகளுடன்:
சக உத்தியோகத்தர்கள்,
(76553) டனிஷ் அகதிகள் பேரவை (DRC), இலங்கை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 . 11 . 1973



உதிர்வு 03 . 08 . 2007

**அமரர் தர்மலிங்கம் சண்முகராஜா (அலன்)**

திதி: பஞ்சமி (23.07.2008)

ஆயிரம் உறவுகள்
அவனியில் இருந்தாலும்.....
அன்புள்ளம் உமைப் போல்
ஆதரிப்போர் யாருண்டு?

பவள மல்லிப் பூவாய், உதிர்கின்ற நினைவுகள்.....
பன்னீராய் அபிஷேகிக்கும், கண்ணீரின் கவலைகள்.....
ஆழ்கடலின் இரைச்சலாய் ஓலமிடும் உணர்வுகள்....
பிரிவெனும் கும்மிருட்டில், வழிகாணாத் தேடல்கள்....
ஏங்கி விழிர் விழித்து, ஆவி துடிதுடித்து,
"அப்பா", "அப்பா" என அலறும் குரல் கேட்டு,
அணைத்திட வாரீரோ!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(76451)

80, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். உங்கள் நினைவுடன் மனைவி, மகள்.

## ஆனைக்கோட்டை பாடசாலைக்கு அன்பளிப்புகள்

நவாலி, ஜூலை 23

சிறுவர்பாதுகாப்பு நிதியம் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலைக்கு கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் அடங்கிய பைகளையும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான றோணியோ இயந்திரம் ஒன்றையும் வழங்கியுள்ளது.

கற்றல் உபகரணங்கள் அடங்கிய பைகளை சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி 330 மாணவர்களுக்கு கடந்த வாரம் வழங்கினார். (222-100)


**MJ MAHARAJ**



**உள்ளூர் VAN சேவை**

1 km = Rs.40

உடன் அழையுங்கள்

222 6659, 077 3114803, 222 9653

(76094)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 19 . 03 . 1932



உதிர்வு 23 . 06 . 2008

திருமதி

**ஆசாரி நல்லையா செல்லம்**

கடந்த 23.06.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், எமக்கு உற்றதுணையாக நின்று ஆறுதல்களையும், அனுதாபங்களையும் அளித்து பலவழிகளிலும் உதவியோருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (23.07.2008) புதன்கிழமை நண்பகல் 12மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தச்சன்தோப்பு,
கைதடி. (76557)

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**கலாநிதி செல்லப்பா ஜெயரத்தினம்**

(ஓய்வுபெற்ற பிரதி விவசாயப் பணிப்பாளர், முன்னாள் யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்)

| | | |
|---|---|---|
| 01.05.1929 | இவ்வுலகில் | 24.08.1937 |
| 24.06.2008 | இறைஅருகில் | 19.04.2008 |

*அங்கே இரவே இராது. விளக்கின் ஒளியோ கதிரவனின் ஒளியோ அவர்களுக்குத் தேவைப்படாது. ஏனெனில் கடவுளாகிய ஆண்டவர் அவர்கள் மீது ஒளி வீசுவார்; அவர்கள் என்றென்றும் ஆட்சி புரிவார்கள்.*

திருவெளிப்பாடு 22:5

24.06.2008 அன்று இறைவனுக்குள் நித்திரையடைந்த எமது தந்தையின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி, தந்தி, மின்னஞ்சல் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, நாளை (24.07.2008) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வாழ்வுக்கும் பணிக்கும் நன்றி செலுத்தும் வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அழைப்புக் கிடைக்காதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சின்னப்பா வீதி,
நவாலி கிழக்கு, மானிப்பாய். (76443)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுடர்

கொழும்பு கல்விவலய ஆசிரிய ஆலோசகர் சங்க அனுசரணையுடன் கல்வி வளவாளர் நிலையம் அண்மையில் நடாத்திய க.பொ.த (உயர்தர) முன்னோடிப் பரீட்சை வினாத்தாள் - ஒகஸ்ட், 2008

33 T II

## கணக்கீடு

1 மணித்தியாலம்

(11.07.2008ஆம் திகதிய தொடர்ச்சி)

### கணக்கீடு-02, பகுதி-II

02. ஆ. 4) அ. வரையறுத்த ராஜ் கம்பனியால் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் தொடர்பான பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

- ★ மாதத்திற்கான உச்ச நுகர்வுப் பயன்பாடு 600 அலகுகள்.
- ★ மாதத்திற்கான இழிவு நுகர்வுப்பயன்பாடு 400 அலகுகள்.
- ★ கட்டளையிட்டுப் பொருட்களைப் பெற்றுகொள்வதற்கான உச்சக் கட்டளைக் காலம் 6 மாதங்கள். இழிவுக் காலம் 2 மாதங்கள்.
- ★ சிக்கனக் கட்டளைத்தொகை 300 அலகுகள்.

மேலுள்ள தகவல்களுக்கமைய கீழ்க்காணும் இருப்பு மட்டங்களைக் காண்க.

1. மறுகட்டளையிடும் மட்டம்.
2. இழிவு இருப்பு மட்டம்.
3. உச்ச இருப்பு மட்டம்.
4. சராசரி இருப்பு மட்டம்.

இ. 2008 ஜனவரி மாதத்திற்குரிய கையிருப்பு உருப்படி மீதான கொடுக்கல் வாங்கல்கள் உற்பத்தி நிறுவனமொன்றிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

ஜனவரி 01 கையிருப்பு மீதி 250 அலகுகள், ஒவ்வொரு அலகும் ரூபா 5 வீதம்.
ஜனவரி 02 கொள்வனவு 500 அலகுகள், ஒவ்வொரு அலகும் ரூபா 4 வீதம்.
ஜனவரி 08 தொழிற்சாலைக்கு 400 அலகுகள் வழங்கப்பட்டன.
ஜனவரி 12 கொள்வனவு 600 அலகுகள், ஒவ்வொரு அலகும் ரூபா 6 வீதம்.
ஜனவரி 15 தொழிற்சாலைக்கு 350 அலகுகள் வழங்கப்பட்டன.
ஜனவரி 18 தொழிற்சாலைக்கு 250 அலகுகள் வழங்கப்பட்டன.
ஜனவரி 19 தொழிற்சாலையிலிருந்து 50 அலகுகள் களஞ்சியசாலைக்கு திருப்பப்பட்டன. இவை ஜனவரி 18ஆம் திகதியில் வழங்கப்பட்டவை.
ஜனவரி 25 கொள்வனவு 300 அலகுகள், ஒவ்வொரு அலகும் ரூபா 7 வீதம்.
ஜனவரி 27 வழங்குநருக்கு 100 அலகுகள் திருப்பப்பட்டன. இவை ஜனவரி 25 இல் கொள்வனவு செய்யப்பட்டவை.
ஜனவரி 30 தொழிற்சாலைக்கு 150 அலகுகள் வழங்கப்பட்டன.

**உம்மிடம் வேண்டப்படுவது :-**

முதல் வருதல், முதற்செல்லல் முறையின் (FIFO) கீழ் களஞ்சியப் பேரேட்டுக்கணக்கு.

5) அ. வரையறுத்த முஸ்தபா கம்பனியின் சம்பளம், கூலி தொடர்பான 2008 மே மாதத்திற்குரிய தகவல்கள் பின்வருமாறு:-

| ஊழியர் பெயர் | அடிப்படைச் சம்பளம் | மேலதிக நேரம் | வாழ்க்கைச் செலவுப்படி | கடன் அறவிடுகள் | சம்பள முற்பண அறவீடு |
|---|---|---|---|---|---|
| அஜித் | 36,000 | 15 மணி | 2,500 | 2,000 | 3,000 |
| அரவிந் | 36,000 | 15 மணி | 2,500 | 2,000 | 3,000 |
| அக்பர் | 27,000 | 20 மணி | 2,500 | 1,500 | 2,000 |
| அசோக் | 27,000 | 20 மணி | 2,500 | 1,500 | 2,000 |

**மேலதிக தகவல்கள்:-**

1) ஒரு மாதத்திற்குரிய வேலை மணித்தியாலங்கள் 180 ஆகும்.
2) EPF பங்களிப்பு தொழிலாளர்கள் 10%உம், தொழில் கொள்வோர் 15%உம் ஆகும்.
3) ETF 3% ஆகும்.
4) மேலதிக கொடுப்பனவு வழமைக் கொடுப்பனவின் 1½ (150%) மடங்காகும்.

**உம்மிடம் வேண்டப்படுவது:-**

1) மே மாதத்திற்கான சம்பளப்பட்டியல்.
2) சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு.

ஆ. தொலைக்காட்சிப் பெட்டிகளை உற்பத்தி செய்யும் குமரன் உற்பத்திக் கம்பனி இரு உற்பத்தித் திணைக்களங்களையும், ஒரு சேவை திணைக்களத்தையும் கொண்டுள்ளது. 2008 ஏப்ரல் மாதத்திற்கான மதிப்பிடப்பட்டுள்ள மேந்தலைக் கிரயங்கள் பின்வருமாறு:-

| விடயம் | மொத்தம் |
|---|---|
| நேரில் பொருட்கள் | 73,000 |
| நேரில் கூலிகள் | 110,000 |
| வாடகை | 42,000 |
| இயந்திரக்காப்புறுதி | 30,000 |
| இயந்திர இயக்குதல் சக்தி | 70,000 |
| மின்சாரம் (வெளிச்சம்) | 84,000 |
| ஊழியர் நலன்புரிச் செலவுகள் | 66,000 |
| | 475, 000 |

| உற்பத்தி-I | உற்பத்தி-II | சேவை |
|---|---|---|
| 34,000 | 33,000 | 6,000 |

**ஏனைய தகவல்கள்:-**

**திணைக்களம்**

| விடயம் | உற்பத்தி-I | உற்பத்தி-II | சேவை |
|---|---|---|---|
| ஊழியர் எண்ணிக்கை | 20 | 20 | 04 |
| இயந்திரப் பெறுமதி (ரூபா 000) | 1,000 | 500 | - |
| இயந்திர மணித்தியாலம் | 2,000 | 1,500 | - |
| தளப்பரப்பளவு (சதுரமீற்றர்) | 2,000 | 2,000 | 200 |

சேவைத்திணைக்கள மேந்தலை இயந்திர மணித்தியாலத்தின் அடிப்படையில் உற்பத்தித் திணைக்களங்களுக்கு மீளப்பகிரப்படுகின்றது.

**வேண்டப்படுவது:-**

1) ஒவ்வொரு திணைக்களங்களிற்கும் பொருத்தமான அடிப்படையில் மேந்தலைகளைப் பகிர்க.
2) சேவைத் திணைக்கள மேந்தலையை உற்பத்தித் திணைக்களங்களுக்கு மீளப்பகிர்வு செய்க.
3) தொலைக்காட்சி ஒன்றிக்கு உற்பத்தித் திணைக்களம் I இல் 6 இயந்திர மணித்தியாலங்களும், உற்பத்தித் திணைக்களம் II இல் 5 இயந்திர மணித்தியாலங்களும் தேவைப்படுகின்றன. தொலைக்காட்சிப்பெட்டியொன்றிக்கான மொத்த மேந்தலையைக் கணிப்பிடுக.

4) அ. வரையறுத்த பசில் கம்பனியானது ஓர் உற்பத்திக் கம்பனியாகும். இக்கம்பனியானது, ஒரு புதிய பொருளைச் சந்தைக்கு அறிமுகப்படுத்தத் தீர்மானித்தது. அத்தகைய புதிய பொருளை அலகு ஒன்று ரூபா 50 இற்கு விற்பனை செய்யமுடியும். அத்துடன் சந்தையில் வருடத்திற்கான விற்பனை செயற்பாடு மட்டமான 12,000 அலகுகளுக்கும் 15,000 அலகுகளுக்கும் இடையில் காணப்படுகின்றது. இவற்றுக்கான முன்னுணரப்பட்ட கிரயப்பகுப்பாய்வு கீழ்வருமாறு:-

12,000 அலகுகளுக்கான உற்பத்திக் கிரயம் ரூபா 580,000
15,000 அலகுகளுக்கான உற்பத்திக் கிரயம் ரூபா 700,000

**உம்மிடம் வேண்டப்படுவது:-**

1) அலகிற்கான பங்களிப்பு.
2) மேற்படி கம்பனியின் நிலையான கிரயம்.
3) இலாப நட்டமற்ற புள்ளி அலகுகள்.
4) அ. குறித்த வருடத்திற்கான எதிர்பார்க்கப்பட்ட விற்பனை 14,000 அலகுகள் எனின், பாதுகாப்பு எல்லை.
ஆ. குறித்த வருடத்திற்கான நிறுவனத்தின் இலாபம்.

5) அ. 14,000 அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகையில் எல்லைக்கிரய வருமானக் கூற்றினைத் தயாரிக்குக.

ஆ. விமன் வரையறுத்த கம்பனி ஓர் இலத்திரனியல் உற்பத்திக் கம்பனியாகும். இக்கம்பனியானது ரூபா 100,000 கிரயமான முதலிட்டுப் பெறுமதியில் ஒரு செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்த இருக்கின்றது. இத்திட்டமானது, ஐந்து வருடங்கள் தொடரும் என மதிப்பிடப்பட்டது. ஐந்து வருடங்களுக்குமான எதிர்பார்க்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் பின்வருமாறு:-

| வருடம் | எதிர்பார்க்கப்படும் தேறிய காசுப்பாய்ச்சல் (ரூபா) |
|---|---|
| 1 | 30,000 |
| 2 | 40,000 |
| 3 | 60,000 |
| 4 | 45,000 |
| 5 | 25,000 |

ஐந்து வருடத்திற்குப் பின் இயந்திரத்தின் இறுதிப் பெறுமதி – 10,000

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| 10% கழிவுக்காரணி | 0.909 | 0.826 | 0.751 | 0.683 | 0.621 |

**வேண்டப்படுவது:-**

1) மேற்படி செயற்றிட்டத்தின் கிரயத்தினை திரும்பப் பெறும் காலம்.
2) கழிவுக்காரணி 10% எனக்கொண்டு தேறிய நிகழ்காலப்பெறுமதியினைக் கணிப்பிடுக.

முற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தரம் - 05 மாணவர்களுக்காக
## ஆசிரியர் பி.அம்பிகைபாகன் தொகுத்து வழங்கும்
## புலமை இலகுவழி பயிற்சிப்பரீட்சை

முதலாம்,2ஆம் வினாக்களில் ஒரு பொருளினை உயரத்திலிருந்து நேராகப் பார்க்கும்போது அது தோற்றும் விதம் முதலில் தரப்பட்டுள்ளது. இப்பொருளை பக்கத்தில் இருந்து பார்க்கும்போது அது தோற்றும் விதத்தினைக் காட்டும் உருவினைத் தெரிவு செய்க.


01.




02.




கீழே சில மரத்துண்டுகள் ஒன்றோடொன்று ஒட்டியிருக்கும் வகையிலமைந்து காணப்படுகின்றன. இவற்றை அவதானித்து 3ஆம், 4ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.




03. பக்கம் A யிலிருந்து பார்க்கும்போது இந்த மரத்துண்டுகள் தோற்றும் விதத்தைத் தெரிவு செய்க.



04. பக்கம் B யிலிருந்து பார்க்கும்போது இந்த மரத்துண்டுகள் தோற்றும் விதத்தைத் தெரிவு செய்க.



பின்வரும் உரைப்பகுதியில் உருவினால் காட்டப்பட்டுள்ள இடங்களுக்கு பொருத்தமான சரியான சொல்லைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து 5ஆம், 6ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.


ஒரு நாள் தளம் ஒன்றின் மேலாக பறந்து செல்லும்போது அக்குளம் வரண்டிருப்பதைக் கண்டது. அக்குளத்தில் மிகுந்த சிரமத்துடன் உயிர் வாழ்வதைக் கண்ட கொக்கு அதனிடம் இரக்கம் கொண்டு குளத்தின் அருகில் வந்து உன்னை நிரம்பிய அழகிய குளத்துக்குக் கொண்டு சென்று விடவா எனக் கேட்டது.

05.  உருவுக்குப் பொருந்தமான சொல்லைத் தெரிவு செய்க.
1) கொக்கு. 2) ஒரு கொக்கு. 3) கொக்கினை.


06.  உருவுக்குப் பொருந்தமான சொல்லைத் தெரிவு செய்க.
1) ஆமை. 2) ஓர் ஆமை. 3) ஆமையை.

07.  உருவுக்குப்பொருந்தமான சொல்லைத் தெரிவு செய்க.
1) மீன்களை. 2) ஒருமீன். 3) மீன்கள்.

இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பொருள்களை இரண்டு கூட்டங்களாக பிரிக்கலாம்.





08. இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.





இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாக பிரிக்கலாம்.




09. இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.




10. இந்த உருவைப் பூரணப்படுத்துவதற்குக் கீழே தரப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து பயன்படுத்தக்கூடிய பகுதியைத் தெரிவு செய்க.



11. இந்த உருக்களின் நிரையிலே அடுத்ததாக வரவேண்டிய பொருத்தமான உருவைக் கீழே தரப்பட்டுள்ள உருக்களிலிருந்து தெரிவு செய்க.



12. எல்லாப் பறவைகளுக்கும் பொதுவான இயல்பு எது?
1) பறப்பதற்கு இயலுமாக இருத்தல். 2) உடலில் இறகு இருத்தல்.
3) பழங்களை மட்டும் உணவாகக் கொள்ளல்.

13. எல்லா மாணவர்களுக்கும் பொதுவான இயல்பு எது?
1) தினமும் 5 மணித்தியாலங்கள் பாடம் தொடர்பான வேலையில் ஈடுபடுதல்.
2) ஏதேனுமொரு வகுப்பில் கல்வி கற்றல்.
3) அதிக எண்ணிக்கையான நண்பர்களைக் கொண்டிருத்தல்.

பாடசாலை விடுமுறை முடிவடைவதற்கு இன்னும் சில நாட்களே உள்ளன. விடுமுறைக் காலத்தை விளையாட்டுகளில் கழிப்பதற்குக் கிடைத்தமை என்னை மகிழ்ச்சியடையச் செய்தது. விடுமுறை ஆரம்பித்த தினத்திலே நான் அப்பாவுடன் எனது கிராமத்துக்கு வந்தேன். அடுத்த நாள் தொடக்கம் கிராமத்திலுள்ள பாடசாலையில் ஐந்தாம் தரத்தில் ஒன்றாகக் கல்விகற்ற நண்பர்களோடு இணைந்து அயலிலுள்ள தோட்டங்களில் உலாவித்திரிந்தும், பழங்களைப் பறித்தும், விளையாடியும் கழித்த நாட்கள் இன்னும் ஓர் இரு நாட்களில் முடிவு பெறுவதை நினைக்கும்போது எனக்குப் பெரிதும் வேதனையாகவுள்ளது. மீண்டும் நகரத்துக்குச் செல்ல வேண்டும். இன்னும் மூன்று மாதங்கள் கழியும் வரை இத்தகைய மகிழ்ச்சியான காலம் ஏற்படமாட்டது.

14. இவ்விவரத்தில் குறிக்கப்படும் பிள்ளை பற்றிய கூற்று எது?
1) அவர் முதலாம் தரத்திலிருந்தே நகர்ப்புறப் பாடசாலையொன்றில் கல்வி பெறுபவர் ஆவார்.
2) அவர் கிராமப் பாடசாலையில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பின்னர் நகரப்புறப் பாடசாலைக்குச் சென்றவர் ஆவார்.
3) கிராமப் பாடசாலையொன்றில் ஆறாம் தரத்தில் கல்வி கற்கும் ஒருவர் ஆவார்.

15. இப்பிள்ளை,
1) நகரத்துக்குச் சென்ற பின்னர் தமது கிராம நண்பர்களை மறந்து விட்ட ஒருவராவார்.
2) பாடசாலை வேலைகளைப் பற்றி மட்டுமே சிந்திக்கும் ஒருவராவார்.
3) கிராமத்தில் கழித்த வாழ்க்கை பற்றிச் சிந்தித்து மகிழ்ச்சியடைபவராவார்.

16. பழம் நழுவிப் பாலில் விழுதல் என்பதற்குப் பொருத்தமான நிகழ்ச்சி எது?
1) எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் குமாரனுக்கு தந்தை புத்தகம் சிலவற்றைப் பரிசாகக் கொடுத்தல்.
2) எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் நிசாருக்கு பந்தொன்றும் துடுப்பொன்றும் பரிசாக வழங்குதல்.
3) எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் அந்தோனிக்கு தொலைக்காட்சி பார்ப்பதற்கு தடை விதித்தல்.

குறித்த ஒரு வருடத்தின் நாட்காட்டியில் இருந்து பின்வரும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| யூன்.01 - செவ்வாய் | யூலை.01 - வியாழன் | ஆகஸ்ட்.01 - ஞாயிறு |
| யூன்.30 - புதன் | யூலை.31 - சனி | ஆகஸ்ட்.31 - ........ |


17. இதற்கேற்ப அவ்வருடத்தின் ஆகஸ்ட் 31ஆம் திகதி.
1) சனிக்கிழமையாகும். 2) செவ்வாய்க்கிழமையாகும். 3) புதன்கிழமையாகும்.

18. சில வருடங்களின் டிசம்பர் 31 திகதி வாரத்தின் என்ன நாள் என்பதை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.


| வருடம் | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருடத்தின் நாட்களின் எண்ணிக்கை | 365 | 365 | 365 | 366 | 365 | 365 | 365 | 366 |
| டிசம்பர் 31 ஆம் திகதி | திங்கள் | செவ்வாய் | புதன் | வெள்ளி | சனி | ஞாயிறு | ....... | ........ |

19. இதற்கேற்ப 2007 டிசம்பர் 31ஆம் திகதியும் 2008 டிசம்பர் 31ஆம் திகதியும் முறையே,
1) திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் ஆகும்.
2) திங்கட்கிழமையும் புதன்கிழமையும் ஆகும்.
3) செவ்வாய்க்கிழமையும் புதன்கிழமையும் ஆகும்.

20. ஒரு வகுப்பில் உள்ள ஐந்து நண்பர்கள் ஒவ்வொருவரும் அவர்களின் பிறந்த தினத்திற்கு ஒருவருக்கொருவர் வாழ்த்து மடல்களை அனுப்பிக் கொள்வர். ஒரு வருடத்தில் இவர்களிடையே பரிமாறிக்கொண்ட வாழ்த்து மடல்களின் எண்ணிக்கை யாது?
1) 5 2) 20 3) 25

21.  கடதாசித்தாள் ஒன்றில் நிற நூல் துண்டுகளை ஒட்டுவதன் மூலம் உருவில் காட்டப்பட்டுள்ள வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் பகுதியை ஆக்க 15cm நீளமான நூல்துண்டு தேவைப்பட்டது எனில், முழு வடிவத்துக்கும் பயன்படுத்தப்பட்ட நூலின் நீளம் யாது?
1) 60 cm 2) 90 cm 3) 120 cm


கீழுள்ள வினா பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பின்வரும் உருவில் எண் இயந்திரம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. அவ் இயந்திரத்திற்குள் எண் ஒன்றை உட்செலுத்தினால் அது அவ் எண்ணை 2 இனால் பெருக்கி கிடைக்கப்பெறும் விடையிலிருந்து 1ஐக் கழித்து வரும் விடையைத் தரும்.




22. இவ் இயந்திரத்தினுள் 1 ஐச் செலுத்தினால் கிடைக்கும் விடை யாது?
1) 0 2) 1 3) 2

23. உரு இற்குத் தரப்பட்டுள்ள பெறுமானம் யாது?
1) 1
2) 3
3) 5




24.  உருவில் ஒரு சதுர மரக்குற்றி காணப்படுகின்றது. அது மேற்பரப்பில் மை பூசப்பட்டு கோடுகள் வழியே சிறு துண்டுகளாக வெட்டி வேறாக்கப்படுகின்றது. மை பூசப்படாத துண்டுகளின் எண்ணிக்கை யாது?
1) 1
2) 2
3) 3

25. செங்கற்களினால் கட்டப்பட்ட மதிலின் உரு கீழே காணப்படுகிறது. இதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியினால் காட்டப்படும் வெளியை முழுமையாக நிரப்பத் தேவையான செங்கற்களின் எண்ணிக்கை யாது?
1) 6
2) 9
3) 12



26. 


மேலுள்ள கோட்டுப்படத்தில் - ? - இனால் காட்டப்படும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான உருவைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.




27. பின்வரும் உருவில் → இனால் காட்டப்படும் அட்டைக்கு உரிய எண்ணைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.




1) 2 2) 7 3) 8

வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.

28. பசி: உணவு எனின் நோய் : ...............
1) வைத்தியர். 2) மருந்து. 3) ஓய்வு.

29. வெளிச்சம்: நிழல் எனின் ............... : வெள்ளம்.
1) மழை. 2) உதவி. 3) படகு.


30. கடல்: நீர் எனின் நிலம்: ...............
1) மனிதர். 2) மண். 3) மரம்.


31. திருத்தமான கருத்தைத் தரும் சோடிவாக்கியங்களைத் தெரிவு செய்க.
1) நாம் பாதுகாக்கப்பட வேண்டிய சுற்றாடல் ஆகும். அப்போது நாம் சுற்றாடலைப் பாதுகாப்போம்.
2) எங்களைச் சுற்றாடல் பாதுகாக்க வேண்டும். அப்போது நாம் சுற்றாடலைப் பாதுகாப்போம்.
3) நாம் சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டும். அப்போது சுற்றாடல் எங்களைப் பாதுகாக்கும்.

32. ''புலமைப்பரிசில் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைவேன்'' என்று சாந்தன் கூறுகின்றான். அவன் இவ்வாறு கூறுவது,
1) இப்பரீட்சையில் எவரும் இலகுவாகச் சித்தியடையலாம் என்பதனாலாகும்.
2) அவன் பரீட்சைக்கு நன்கு தயாராகி இருந்ததனாலாகும்.
3) இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் பரீட்சை நடைபெறுவதனாலாகும்.

33. பிள்ளைகள் மூத்தோருக்கு மரியாதை செய்யப் பழகுதல் வேண்டும். இதற்குரிய காரணம்,
1) மூத்தோரினால் பிள்ளைகளுக்குத் தண்டனை வழங்க முடியுமாகையால்.
2) மூத்தோர் நோயினால் வருந்துவதனால்.
3) மூத்தோர் பிள்ளைகளைவிட அனுபவம் நிறைந்தவராகையால்.

34. உருவை மிக நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்க.
1) விளையாட்டு, உடற்பயிற்சி, மகிழ்ச்சி.
2) விளையாட்டு, களைப்பு, பாடசாலை.
3) உடற்பயிற்சி, பணம், நேரம்.



35. 


உருவின்படி சேரனின் தாய்தந்தையரைக் குறித்து நிற்கும் எழுத்துக்கள் எவை?
1) A, B 2) C, D 3) I, J

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சுப்பர் 6' சுற்றுக்கு முன்னேறியது மகாஜன

வலிவடக்கு, ஜூலை 23

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் பாடசாலை அணிகளின் 15 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்திவரும் சுற்றுப்போட்டியில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்றதன் மூலம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 'சுப்பர் 6' சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி 30.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 85 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

அனுஷ்காந் இரண்டு நான்குகளுடன் 12, திவாகர் இரண்டு நான்குகளுடன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 36 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மதுசன் 8.3 ஓவர்கள் பந்துவீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளும், திலக்சன் 08 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் மோசிகீரன் 08 ஓவர்கள் பந்துவீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 23 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், பிரசாந் 06 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

86 ஓட்டங்கள்பெற்றால்வெற்றி என்ற இலக்குடன்பதிலுக்குதுடுப்பெடுத்தாடக் களம்மிறங்கிய மகாஜனக் கல்லூரி 24.1 ஓவர்களில் 03 விக்கெட்டுக்களை இழந்து 86 ஓட்டங்களைப்பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

பிரசாந் ஐந்து நான்குகளுடன் 29, விகிந்தன் ஆட்டமிழக்காது இரண்டு நான்குகளுடன் 19, திலக்சன் 10 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக்கொண்டார்.

ஆதவன் 05 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 15 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் அனுசாந் 07 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

## சென்.ஜேன்ஸ் 8 விக்கெட்டுக்களால் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 23

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஓர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம்சென். ஜோன்ஸ் கல்லூரி பி அணி 08 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.


யோகீதன்

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் சென்.ஜோன்ஸ் கல்லூரி பி அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 39.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்று கொண்டது.

சஞ்சயன் நான்கு நான்குகள் உட்பட 29, குமுதன் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

ஸ்ரீபன் 8.3 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 20 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் வில்சன் 08 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 14 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் பௌசிகன் 09 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 24 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கிருத்திகன் 04 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 09 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சபேசன் 07ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

114 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென்.ஜோன்ஸ் 'பி' அணி 22.3 ஓவர்களில் 02 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. யோகீதன் ஆட்டமிழக்காது ஆறு நான்குகள் உட்பட 51, கிருத்திகன் 21 ஓட்டங் களையும் பெற்றார்கள்.

குமுதன் 06 ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சஞ்சயன் 8.3 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

## பெரியபுலம் ம.வியை வென்றது யூனியன்

வலி.வடக்கு, ஜூலை 23

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் பாடசாலைகளுக்கு இடையே நடத்திவரும் 17 வயதுப் பிரிவினருக்கான சுற்றுப்போட்டியில் ஆட்டம் ஒன்றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாயமும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய பெரியபுலம் மகா வித்தியாலயம் 27.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 87 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

பிரதீபன் ஐந்து நான்குகளுடன் 24, கஜேந்திரன் நான்கு நான்குகளுடன் 23 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 16 ஓட்டங்களும் பெறப்பட்டன.

தர்சன் 5.4 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் துர்யந்தன் 05 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டு களையும் சுயந்தன் 09 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 05 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், டெனிஸ் 06 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், வரன் 07 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

88 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத்துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 15:1 ஓவரில் நான்கு விக்கெட்டுகளை இழந்து 91 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

துர்ஜந்தன் ஏழு நான்குகளுடன் 34, டெனிஸ் ஆட்டமிழக்காமல் நான்கு நான்குகளுடன் 20 ஓட்டங்களையும் உதிரிகளாக 22 ஓட்டங்களும் பெறப்பட்டன.

அனுசன் 03 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 07 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளும் ரவிசாந் 4.2 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 06 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கஜன் ராஜ் ஒரு ஓவர் பந்துவீசி 08 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

## கொக்குவில் இந்துவை 5 விக்கெட்டுக்களால் வென்றது சென்.ஜோன்ஸ் கல்லூரி

யாழ்பாணம், ஜூலை23

இலங்கை பாடசாலைகள் கிரிகெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைனள் கிரிக்கெட் சங்கம் பாடசாலைகளுக்குஇடையே நடத்திவரும் 15 வயதுப் பிரிவினருக்கான சுற்றுப் போட்டியில் ஆட்டம் ஒன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி 5 விக்கெட்டுகளினால் வெற்றிபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி 45.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளை யும் இழந்து 132 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

சஜன் மூன்று நான்குகள் உட்பட 22, அமிர்தயன், துஷ்யந்தன் தலா 14 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள். உதிரிகளாக 37 ஓட்டங்கள் பெறப்பட்டன.

சதுர்சன் 10 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் பங்குஜன் 5.1 ஓவர்கள் 21 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் திவாகர் 03 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் செந்தூரன் 06 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சங்கீத் 06 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

133 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 34 ஓவர்கள் நிறைவில் 05 விக்கெட்டுகளை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

ஆதித்தன் ஒரு ஆறு, மூன்று நான்குகளுடன் 31, ஆட்டமிழக்காது திவாகர் நான்கு நான்குகளுடன் 25, பங்குஜன் இரண்டு நான்குகள் உட்பட 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள். உதிரிகளாக 42 ஓட்டங்கள் பெறப்பட்டன.

ஹரிகரன் 06 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 25 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கபிலன் 05 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சிவலக்சன் 08 ஓவர்கள் பந்துவீசி ஏழு ஓட்டமற்ற ஓவருடன் 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் எட்வின் ஜோய் 03 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 02 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புவேந்தன் முன்பள்ளி முதலிடம் பெற்றது

யாழ்பாணம், ஜூலை23

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளிச் சிறார்களிடையே நடத்திய மெய்வன்மைப் போட்டியில் சாவகச்சேரி புவேந்தன் முன்பள்ளி முதலிடம் பெற்றது.

14 முன்பள்ளிகளின் சிறார்கள் கலந்து கொண்ட இந்தப் போட்டிகளில் சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தைச் சேர்ந்த ஜீவரஞ்சன் பவித்திரா, மட்டுவில் தெற்கு கலைமகள் முன்பள்ளியைச் சேர்ந்த பாஸ்கரன் சேஸினி, நுணாவில் மேற்கு அம்பாள் முன்பள்ளியைச் சேர்ந்த ஞானசேகரம் விஸ்தா ஆகியோர் அதிக புள்ளிகளைப் பெற்று முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்டனர். போட்டிகளில்கலந்துகொண்ட அனைத் துச் சிறார்களுக்கும் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (1-207)

## சோனகதெரு முன்பள்ளியில் விளையாட்டுப்போட்டி

யாழ்பாணம், ஜூலை23

சோனகதெரு அல்ஹதீஜா முன்பள்ளிச் சிறுவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

முஹம்மதியா ஜூம் ஆ பள்ளித் தலைவர் ஜனாப் எம்.வி.எம்.சியானாஸ் தலைமையில் நிகழ்வு இடம்பெறும். மாலை பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

### குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## வடமராட்சியில் சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை23

வடமராட்சி, வலயப்பாடசாலைகளுக்கு இடையிலான தரம் 4, 5, 6, 7 ஆகிய பிரிவுகளுக்கு நடத்தப்பட்டசதுரங்கப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டி முடிவுகள் வருமாறு:-

***தரம் 4 ஆண்கள்*** : ஆர்.தர்விகன் (மாணிக்கவாசகர் வித்தி.), வை.றதீசன் (மாணிக்கவாசகர் வித்தி.), என். வினோஜன் (விக்னேஸ்வராக் கல்லூரி)

***தரம் 5 ஆண்கள்*** : ஆர்.லோஜிதன் (தம்பசிட்டி அ.மி.த.க), எஸ்.தெய்வேந்திரன் (தும்பளை சிவப்பிரகாச ம.வி), ரி.அஜித்ராஜ் (தும்பளை சிவப்பிரகாச ம.வி)

***தரம் 6 ஆண்கள்*** : எஸ்.கஜானன் (ஹாட்லிக் கல்லூரி), வி.திருபரன் (ஹாட்லிக் கல்லூரி), எம்.தயாணந் (ஹாட்லிக் கல்லூரி),

***தரம் 7 ஆண்கள்*** : எஸ்.சஞ்சியன் (ஹாட்லிக்.), ஐ.கிர்சிகேசன் (ஹாட்லிக்.), ஆர்.மதுசன் (ஹாட்லிக்.)

***தரம் 4 பெண்கள்*** : எஸ். சன்சிகா (உடுப்பிட்டி மகளிர்), எஸ்.சர்மினி (தும்பளை சிவப் பிரகாச ம.வி.), எஸ்.தமிழினி (வல்வை மகளிர்)

***தரம் 5 பெண்கள்*** : வி. மாதுமை (வட இந்து மகளிர்), பி.சௌந்தரியா (உடுப்பிட்டி மகளிர்), எஸ்.வினோதினி (உடுப் பிட்டி மகளிர் கல்லூரி)

***தரம் 6 பெண்கள்*** : எஸ்.புவித்தா (மெதடிஸ்த பெ.உ.பா.), ரி.தனுசிகா (கரணவாய் ம.வி.), எம்.புவித்திரா (வல்வை மகளிர் ம.வி.)


***தரம் 7 பெண்கள்*** : எஸ்.நிரயா (வட இந்து மகளிர் கல்லூரி), வி. நிவேதா (வட மத்திய மகளிர் கல்லூரி), ஆர்.சிந்துஜா (வல்வை மகளிர் ம.வி.)



வடமராட்சி சரஸ்வதி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட் டியில் கோட்டக் கல்வியதிகாரி எஸ்.அம் பலவாணர் வெற்றியீட்டிய வீரருக்கு பரிசில் வழங்கப்படுவ தையும் காணலாம்.




அரியாலை கலைமகள் சனசமூக நிலைய முன்பள்ளி சிறுவர்களுக்கான விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்ற சிறுவன் ஒருவனுக்கு யாழ் வை.எம்.சி.ஏ.உபதலைவர் திருமதி தங்கராசா கேடயம் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.
*(படம்:- லக்ஸ்மன்)*



கரம்பொன் புனித தெரேசா (ஞான ஒளி) முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஊர்காவற்றுறை பிரதேச சபைச் செயலாளர் ஏ.கணேசராசா பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். *(1-325)*

# ஊடகவியலாளர் மீது தாக்குதல்; சர்வதேச சம்மேளனம் அதிர்ச்சி

கொழும்பு, ஜூலை 23

நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளால் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை குறித்து சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் அதிர்ச்சி வெளியிட்டுள்ளது.

ஜனநாயக ஆட்சியுடன் தொடர்புடைய முக்கியமான விடயங்கள் குறித்து செய்தி வெளியிடுவது பற்றிய சகிப்புத்தன்மையின்மை அதிகரித்து வருவதை இது புலப்படுத்துவதாக அது குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் மூன்று ஊடகவியலாளர்கள் அரச அதிகாரிகளால் இம்மாதம் 18ஆம் திகதி துன்புறுத்தலுக்கு உள்ளாகினர் என வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் அதிர்ச்சியடைந்துள்ளது. ஊடக உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவை உபகுழு ஏற்படுத்தப்பட்ட பின்னர் இடம்பெற்றுள்ள எட்டாவது சம்பவம் இது வாகும்.

எனினும், ஊடகவியலாளர்களுக்கு எதிரான சமீபத்தைய சம்பவங்கள் எவை குறித்தும் அமைச்சரவை உப குழு விசாரணைகளை மேற்கொள்ளவில்லை.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் 'டெய்லி மிரர்' பத்திரிகையாளர் யொகான் பெரேராவையும், புகைப்படப்பிடிப்பாளர் பிரதீப் ருஷ்னாவையும் தாக்கினர் என சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது. யொகான் பெரேரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சிரச தொலைக்காட்சியின் துஷாந்த மனோஜ் அதிகாரிகளால் துன்புறுத்தப்பட்டுள்ளார்.

தென்னாசிய மாநாட்டை முன்னிட்டு கொழும்பில் வீடுகள் இடிக்கப்படுவது குறித்து செய்தி சேகரித்துக் கொண்டிருந்த வேளையே இவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட பகுதியில் நூற்றுக்கணக்கான பொலிஸார் நின்றிருந்த போதிலும் அவர்கள் இதனைத் தடுக்க முன்வராதமை குறித்து சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் கவலையடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# செங்கலடி வர்த்தகர் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய வெள்ளைவான் மீட்கப்பட்டது

மட்டக்களப்பு, ஜூலை 23

மட்டக்களப்பு செங்கலடியில் ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்குப் பின்னால் சடலமாக மீட்கப்பட்ட வர்த்தகரான தேவதாஸ் சுரேஸ்குமாரை கடத்திச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வெள்ளைநிற வான் ஒன்றை அந்தக் கட்சியின் அலுவலகத்தில் வைத்துப் பொலிஸார் மீட்டிருக்கின்றனர்.

வர்த்தகரின் கொலையுடன் தொடர்புடைய 7 ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இதுவரை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவரது படுகொலையில் மொத்தம் 12 பேர் தொடர்புபட்டிருக்கின்றனர் எனத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களில் இரு ஈ.பி.டி.பி. உறுப் பினர்களும் நேற்று முன்தினம் மட்டக்களப்பு, நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் - குறித்த வர்த்தகர் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களால் கடத்திச் செல்லப்படுவதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வெள்ளைவான் ஒன்றைப் பொலிஸார் தேடி வந்தனர்.

செங்கலடிப் பகுதியிலுள்ள ஈ.பி.டி.பியினரின் முகாம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் அந்த வெள்ளை வான் நேற்றுப் பொலிஸாரால் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (சி)

# மாட்டின் வயிற்றில் ஒருகிலோ பொலித்தீன்களும் வயர்களும்

## சத்திரசிகிச்சை மூலம் அவை அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 23

மாட்டின் வயிற்றில் இருந்து ஒரு கிலோ நிறையுடைய பொலித்தீனும் வயர் கம்பிகளும் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டன.

சாவகச்சேரி கால்நடை வைத்தியரினால் கடந்த வியாழக்கிழமை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு மேற்படி பொருள்கள் அகற்றப்பட்டன.

பத்து நாள்களாக உணவு அருந்தாமல் இருந்த பசு மாட்டினை கால்நடை வைத்தியர் உடனடியாக சத்திர சிகிச்சை மேற்கொண்டபோது வயிற்றினுள் ஒரு கிலோ நிறையுடைய பொலித்தீனும் வயர்களும் கட்டியாக இருந்து அகற்றப்பட்டது.

மாட்டுக்குத் தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் தற்போது மாடு குணமாகி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வரணி, இயற்றாலைப் பகுதியில் உள்ள மாட்டிற்கே சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் மட்டுவில் வடக்குப் பகுதியில் மற்றொரு மாட்டுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போது சுமார் ஒரு கிலோ நிறைவுடைய பயிர்களின் அடிக்கட்டைகள் சமிபாடடையாத நிலையில் கட்டியாக மீட்கப்பட்டது. (202-207)



சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தின நிகழ்வும் அண்மையில் நடைபெற்றன.

விழாவில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி வி.கந்தையா, வைத்திய கலாநிதி லயன் எஸ்.சதாசிவம், பாடசாலை அதிபர் செல்வி நா.ஜெயராணி ஆகியோர் மாலை அணிவித்து விழா மேடைக்கு அழைத்து வரப்படுவதை முதலாவது படத்தில் காணலாம்.

மாணவர்களின் கலை நிகழ்வில் சில காட்சிகளை அடுத்துள்ள படங்களில் காணலாம்.

## தட்சணாங்குளம் பொதுமயானத்தில் கிணற்றிலிருந்து சடலம் மீட்பு!

வவுனியா, ஜூலை 23

வவுனியா தட்சணாங்குளம் பொது மயானத்தில் உள்ள கிணற்றில் இருந்து நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கிராம சேவையாளர் வழங்கிய தகவலைக் கொண்டு பொலிஸார் கிணற்றில் இருந்து சடலத்தை மீட்டனர்.

சடலம் அடையாளம் காணமுடியாத அளவுக்கு உருக்குலைந்து இருப்பதாக வவுனியாப் பொலிஸார் கூறினர்.

மீட்கப்பட்ட சடலம் வவுனியா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மாலை ஒப்படைக் கப்பட்டது. (சி)

# யாழ்ப்பாண பண்பாட்டு, பாரம்பரிய சான்றுகளை ஆவணப்படுத்த காட்சியகம் நிறுவப்படும்

## யாழ்.அரச அதிபர் தகவல்

அச்சுவேலி, ஜூலை 23

எமது பண்பாட்டு, பாரம்பரிய சான்றுகளை ஆவணப்படுத்தி, காட்சிப்படுத்தி பாதுகாக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் இதற்கென காட்சியகம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

இத்தகவலை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கூறினார்.

வலி.கிழக்கு பிரதேச செயலக பண்பாட்டு பேரவையினால் நடத்தப்பட்ட பண்பாட்டு பெருவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் சுவாமி ஞானப்பிரகாசர் அரங்கில் நடைபெற்றது.

வலி.கிழக்கு பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்ற விழாவில் முதன்மை விருந்தினர் யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

எமது பண்பாடும் பாரம்பரியங்களும் பாதுகாக்கப்பட்டு எதிர்காலச் சந்ததிக்குக் கையளிக்கப்பட வேண்டும். காலச்சூழலால் பண்பாடு சிதைவடையுமானால் இனமும் மொழியும் வலுவிழந்து விடும். இன்றைய விழாவில் காணப்படும் ஒருங்கிணைப்பும் மக்களின் ஒத்துழைப்பும் பண்பாட்டுப் பாரம்பரியங்களை உரிய முறையில் பாதுகாத்து மேல்நிலைப் படுத்து வதற்கு சமூகத்தில் ஏற்பட்டுள்ள உறுதிப்பாட்டையும் விழிப்புணர்வையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

எமது பண்பாடும் பாரம்பரியங்களும் மிகவும் தொன்மையானவை. பண்பாட்டை நாம் பாதுகாத்து மேல்நிலைப்படுத்த வேண்டும். பண்பாட்டைப் பாதுகாப்பதற்கு இத்தகைய பண்பாட்டு விழாக்கள் ஆண்டு தோறும் எடுக்கப்பட வேண்டும்.

பண்பாட்டு விழாக்கள் கொண்டாடப்படும் அதே வேளையில் சமகாலச் சூழலில் எமது சமூகத்தில் நிலவும் சமூகச் சீர்குலைவுகளையும் பண்பாட்டுச் சீரழிவுகளையும் உடனடியாகத் தடுத்துநிறுத்த சகல தரப்பினரும் முன்வர வேண்டும்.

சமூகச் சீர்குலைவுகளைச் சீர்படுத்தக் கூடிய கலை வடிவங்களை உருவாக்க வேண்டும். சமூகச் சீரழிவுகளை கட்டுப்படுத்தும் முயற்சியிலும் ஒன்றுபட்ட விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்.

எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களை, கலை வடிவங்களை பாதுகாக்கின்ற நிலைப்பாட்டில் சமூக மட்டத்தில் சீரிய சிந்தனை மாற்றம் ஏற்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. இத்தகைய நிலைப்பாடு எல்லா மட்டத்திலும் ஏற்பட வேண்டும் - என்றார்.

யாழ்.பல்கலைக் கழக முன்னாள் உபவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பேரா.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றும் போது,

எத்தகைய முயற்சிகளையும் நிறுவனமயப்படுத்திய நிலையில் மேற்கொள்ளும் போது கூடிய பயன் விளைவிப்பனவாக இருக்கும். அத்துடன் அதன் தர நிலையும் உயர்நிலையில் பேணப்படும். இதற்கு இரண்டு தினங்கள் நடைபெறும் இந்தப் பண்பாட்டு பெருவிழாவும் இங்கு கூடியிருக்கும் மக்கள் கூட்டமும் எடுத்துக் காட்டாக உள்ளன.

தமிழ் மக்களால் பண்பாட்டு பாரம்பரியங்கள் தனித்துவமானதும் சிறப்பானதுமாகும். நாடு, பிரதேசம், குழுமங்கள் என்ற வகையில் சிறப்பான இயல்புகளைக் கொண்டுள்ளன. அதிலும் யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் விசேட சிறப்பியல்புகளை கொண்டது.

இன்றைய எமது சமூகப் பண்பாடு கால ஓட்டத்திற்கும் உலகியல் மாற்றங்களுக்கும் உலகமயமாக்கலுக்கும் ஏற்புடையதாக சீரமைக்கப்பட வேண்டும். இந்த வகையில் செயற்பாடுகளை காலத்துக்கு ஏற்றவாறு மாற்றிக்கொண்டு முன்னேற வேண்டும். எமது பண்பாட்டின் தனித்துவமான வடிவங்களை சிதைவடையாமல் பாதுகாப்பதோடு உலகியல் மாற்றங்களை உள்வாங்கி முன்னேற வேண்டும் எனக் கூறினார்.

இரண்டாம் நாள் நிகழ்வு காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெற்றன. காலையில் மொழி, பண்பாடு, இலக்கியம் என்ற தொனிப்பொருளை உள்ளடக்கி ஆய்வரங்கு நடைபெற்றது. பெருமளவில் மாணவர்கள் ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

''செம்புல முதுகலைஞர்'' 10 பேர் பாராட்டி பொன்னாடை போர்த்து பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். நாட்டிய நாடகம் உட்பட கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (202-11)

# ரி.பி.ஜயசுந்தரவை ரூ.5 லட்சம் அரசுக்குச் செலுத்த உத்தரவு

## உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் விடுத்தது

கொழும்பு, ஜூலை 22

பிரதமர் ரணிலின் ஆட்சிக் காலத்தில் லங்கா மரைன் சேர்வீஸின் பங்குகளை விற்றமை மற்றும் ஜோன் கீல்ஸ் நிறுவனத்துக்கு கொழும்பு, புளூமெண்டலில் உள்ள எட்டு ஏக்கர் நிலத்தை வழங்கியமை ஆகியவை தொடர்பில் உரிய சட்டமுறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அமைச்சரவையின் அங்கீகாரம் பெறாமல், கேள்விப்பத்திரம் கோரல் தொடர்பான அரச ஒழுங்கு விதிகளைப் பின்பற்றாமல் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இத்தவறான நடவடிக்கை மூலம் அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தக் காரணமாக இருந்தமைக்காக பொது நிறுவனங்கள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவராக அப்போது இருந்த ரி.பி.ஜயசுந்தர 5 லட்சம் ரூபாவும், ஜோன் கீல்ஸ் நிறுவனம் இரண்டரை லட்சம் ரூபாவையும் அரசுக்கு வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதேவேளை புளூமெண்டோலில் தான் பெற்ற எட்டு ஏக்கர் காணியையும் ஜோன் கீல்ஸ் நிறுவனம், துறைமுக அதிகார சபைக்கு அடுத்த ஒரு மாத காலத் துக்குள் மீள ஒப்படைத்து விட வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்தத் பங்குடைமை விற்பனை மற்றும் அரச காணி வழங்கும் விவகாரத்தில் பெரும் ஊழல் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவித்து கொழும்பு மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவின் மீதே நீதிமன்றம் இத்தீர்ப்பை நேற்று வழங்கியது.

இந்த மனுவின் முன்னைய அரசின் அமைச்சர்களான கே. என். ஷொக்ஸி, கரு ஜயசூரிய மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உட்பட 34 பேரின் பெயர்கள் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## பயிற்சி வகுப்புகள்

நவாலி, ஜூலை 23

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் கணனிப் பயிற்சிநெறி, எழுத்தறிவூட்டல் பயிற்சி என்பன நடைபெற்று வருகின்றன.

6 மாதகாலத்துக்கு நடைபெற்று வரும் இப் பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று அப்பாடசாலை அதிபர் த.சிவகடாட்சம் தெரிவித்துள்ளார். (202-100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# புலிகளின் அறிவிப்பு அரசுக்கு அல்ல தெற்காசிய நாடுகள் சமூகத்துக்கே!

''உலக நாடுகளுடனும் எமது பிராந்திய அயல் நாடுகளுடனும் நட்புறவை வளர்த்துக் கொள்ளவே நாம் விரும்புகின்றோம். இதற்கான புற நிலைகளை உருவாக்கி, ஒரு நட்புறவுப் பாலத்தைக் கட்டியெழுப்புவதிலும் இதய சுத்தியோடு இருக்கிறோம். தமிழீழ தேசத்தினதும் தமிழீழ மக்களினதும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி, பரஸ்பர நம்பிக்கையை வளர்த்துவிட விரும்புகிறோம். இந்த நல்லெண்ண நடவடிக்கையாக, சார்க் மாநாடு நடைபெறும் ஜூலை 26 முதல் ஒகஸ்ட் 04 வரையான காலப் பகுதியை இராணுவ நடவடிக்கைகளற்ற அமைதி நாள்களாகக் காத்து, ஒருதலைப்பட்சமாக போர்நிறுத்தத் தைக் கடைப்பிடித்து, மாநாடு வெற்றிபெற ஒத்துழைப் போம்.''

- இவ்வாறு அறிவித்திருக்கின்றனர் புலிகள்.

நேற்று அதிகாலை கிளிநொச்சியிலிருந்து புலிகள் வெளியிட்ட அறிக்கையிலேயே - 'சார்க்' மாநாட்டை ஒட்டிய யுத்த நிறுத்தப் பிரகடன அறிவிப்பிலேயே - மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதே அறிக்கையிலேயே -

தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை முன்வைக்க மறுத்து நிற்கும் சிங்கள அதிகாரபீடம், இராணுவத் தீர்வில் நம்பிக்கை கொண்டு, பெரும் ஆக்கிரமிப்புப் போரைத் தமிழர் தேசம் மீது ஏவிவிட்டிருக்கின்றது என்றும், சிங்கள தேசத்தின் அரசியல் இன்று போராகப் பேய் வடிவம் எடுத்து நிற்கிறது என்றும் புலிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

ஒருதலைப்பட்சமாகத் தம்பாட்டில் யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்யும் அறிக்கையிலேயே சிங்கள ஆட்சிப் பீடத்தின் அரசியல் போராகப் பேய் வடிவம் எடுத்திருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டுவதன் மூலம், இந்த யுத்த நிறுத்த அறிவிப்புக்கு சாதகமான பிரதிபலிப்பை தென்னிலங்கை ஆட்சிப்பீடம் காட்டப்போவதில்லை என்பதையும் நேரத்துடனேயே கோடிட்டுக்காட்டி விட்டார்கள் புலிகள்.

அவர்களின் - ஏனைய பலரின் - எதிர்பார்ப்பின்படி இந்த ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பை உதாசீனப்படுத்தும் வகையில் - எள்ளிநகையாடும் விதத்தில் - இலங்கைத் தரப்பில் கருத்துகள் உடனடியாகவே வெளியாகிவிட்டன.

''இந்த யுத்த நிறுத்த அறிவிப்பு புலிகளின் கபடச் சதித் திட்டம். யுத்தமுனையில் தாங்கள் பலவீனமடையும் சமயங்களில் எல்லாம் பேச்சுகளை மேற்கொள்ளுகின்ற பெயரில் தங்களை இராணுவ ரீதியில் பலப்படுத்த அவர்கள் வழமையாக மேற்கொள்ளும் எத்தனம் இது. அரசைப் பொறுத்தவரை யுத்த நிறுத்தம் ஒன்றில் ஈடுபட வேண்டிய தேவை ஏதும் அதற்கு இல்லை. நாங்கள் புலிகளை நம்புவதாயின் முதலில் அவர்கள் ஆயுதங்களைக் களைந்து எங்களிடம் சரணடையவேண்டும்.'' - என்று அறிவித்திருக்கின்றார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

இலங்கையின் பாதுகாப்புத் துறையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அடுத்து அதிகம் செல்வாக்கும் அதிகாரமும் உடையவர் என்று கருதப்படுபவரும், ஜனாதிபதியின் சொந்தச் சகோதரருமான இவர், புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பு வெளியான கையோடு - சில மணி நேரத்துக்குள் - இப்படிப் பிரதிபலிப்பை வெளிப்படுத்தியிருப்பது கவனிக்கத்தக்கது.

இப்படிப் புலிகளின் அறிவிப்பைக் கிண்டல் செய்து, புறக்கணிக்கும் கருத்துகளை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம, வெளிவிவகாரச் செயலாளர் பாலித கொஹன, அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளரும், இடர் முகாமைத்துவ, மனித உரிமைகள் அமைச்சின் செயலாளருமான கலாநிதி ரஜீவ விஜேசிங்க ஆகியோரும் விடுத்திருக்கின்றனர்.

இவை எதிர்பார்க்கப்பட்டவைதான். புலிகள் கூட, தங்களுடைய ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்புக் குறித்து - இன்றைய கட்டத்தில் - அரசு இப்படித்தான் பிரதிபலிப்புக் காட்டும் என்பதை இலகுவாகவே - சுலபமாகவே - முன்கூட்டியே ஊகித்திருப்பர்.

அதுவும் மன்னார் களமுனையில் புதிய,புதிய பிரதேசங்க ளை அரசுப் படைகள் கைப்பற்றியிருக்கின்றன என்று பிரகடனப்படுத்தி,வெற்றிக்களிப்பில் மிதந்தபடி, அரசுத்தரப்பு இறுமாப்பு அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் -

புலிகள் ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்த அறிவிப்பை விடுத்தால் நிச்சயமாக, அதனைப் பலவீன நிலையிலிருந்து எப்படியும் தப்பிப் பிழைப்பதற்கான புலிகளின் தந்திரோபாயமாகவே சிங்கள தேசம் அர்த்தம் பண்ணும் - வியாக்கியானம் செய்யும் - என்பது முற்கூட்டியே புரிந்து கொள்ளக் கூடியதுதான்.

அவ்வாறு இருக்கையில் - தென்னிலங்கை ஆட்சிப் பீடம் ஏளனம் செய்யக்கூடிய வகையில் - தாம் பலவீனமுற்றவர்களாகக் கருதப்படும் இச்சமயத்தில் - புலிகள் இப்படி ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் அறிவித்தமை ஏன் என்று ஒரு கேள்வி எழுவது இயற்கையே.

இந்த யுத்த நிறுத்தத்தைப் புலிகள் இலங்கை அரசுக்காக - அல்லது இலங்கை அரசுக்கு - அறிவிக்கவேயில்லை என்பதுதான் உண்மை; நிதரிசனம்; மெய்மை நிலை.

சர்வதேச சமூகத்துக்கு - குறிப்பாகத் தென்னாசிய மாநாட்டில் (சார்க்கில்) பங்குபற்றும் தெற்காசிய நாடுகளுக்கு - நட்புறவுடனும் நல்லெண்ணத்துடனும் ஈழத் தமிழர் சார்பில் புலிகள் காட்டிய ஆக்கபூர்வமான சமிக்ஞையே இது. அச் சமூகத்துக்குக் காட்டப்பட்ட இந்த நட்புறவுக் குறியீட்டை இலங்கை அரசு எப்படிப் புரிந்து கொள்கிறது - உள்வாங்குகிறது - கணிப்பிடுகின்றது - என்பது புலிகளின் கவனத்துக்கு அவசியமானதல்ல. புலிகளின் அறிக்கையிலேயே அது மேலோட்டமாகப் புலப்படுவது அவதானிக்கத்தக்கது.

# மன்னார் ஆலயப் புனரமைப்பிற்கும் தங்கி வாழ்ந்து வழிபடவும் உகந்த சூழல் உருவாக்கப்பட வேண்டும்

## டாக்டர் ஜயலத் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, ஜூலை23

மருதமடு புனித ஸ்தலத்திற்கு மன்னார் ஆயரின் தலைமையில் அருட்தந்தையர்கள் மற்றும் பணியாளர்கள் சென்று ஆலயத்தைப் புனரமைப்பதற்கும் அங்கு தங்கியிருந்து வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் உகந்த சூழல் உருவாக்கப்படவேண்டும். மருதமடுவுக்கான பாதையைத் திறந்து அந்தப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர ஆவனசெய்யவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற ஒத்திவைப்பு அமர்வில் சமர்ப்பித்த பிரேரணையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அப் பிரரேரணையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மன்னார் மாவட்டத்தில் உள்ள மருத மடுமாதா ஆலயம் அனைத்து கத்தோலிக்க மக்களினதும் கத்தோலிக்கர்கள் அல்லாத அனைத்து மக்களினதும் கௌரத்துக்குப் பாத்திரமான பெரும் புனித ஸ்தலமாகும். வடக்கு மற்றும் தெற்கைச் சேர்ந்த இலட்சக் கணக்கான மக்கள் வருடாந்தம் ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனும் மருத மடுமாதாவை வணங்கி வந்தனர்.

கொடூரமான யுத்தத்தினால் அநாதரவாகி இடம்பெயர்ந்த அகதிகளுக்கு தமது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள மருதமடு புனித ஸ்தலம் கடந்த பல வருடங்களாகப் பாதுகாப்பும் அமைதியும் நிறைந்த ஓர் அகதி முகாமாக விளங்கியது.

பல நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த வரலாற்றுப் பெருமைமிக்க மருத மடுமாதா சொரூபத்தை எமது நாட்டின் உரிமையாகவும் தேசிய பொக்கிசமாகவும் கருதமுடியும். எமது நாட்டின் சமாதனத்துக்காக பல தடவைகள் மருத மடுமாதா புனித ஸ்தலத்தில் சர்வமதத் தலைவர்கள் சந்தித்துள்ளனர்.

2008 ஆம் ஆண்டு ஆரம்பமான கொடூரயுத்தத்தின் காரணமாக மருத மடு ஆலய புனித ஸ்தலத்தின் முழுமையான பொறுப்பைக் கொண்டிருக்கும் மன்னார் ஆயர் வண.இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பூரண அனுமதி மற்றும் அங்கீகாரத்துடன் மன்னார் கத்தோலிக்க மறைமாவட்ட அருட்தந்தை அவர்கள் தானே எடுத்த ஓர் தீர்மானத்தின்படி மருத மடுமாதா சொரூபத்தை பாதுகாப்புக்கருதி பிறிதோர் கத்தோலிக்க ஆலயத்துக்கு எடுத்துச் செல்ல நேர்ந்தது. அத்துடன் மருத மடு ஆலயத்தில் தங்கியிருந்த கத்தோலிக்க அருட்தந்தைமார், அருட் சகோதரிகள் மற்றும் பணியாளர்களுக்கு தமது உயிர் பாதுகாப்புக்கருதி சுயவிருப்பத்தின் அடிப்படையிலேயே புனித ஸ்தலத்திலிருந்து வெளியேற நேர்ந்தது.

### புனித ஸ்தலம் சூனியப் பிரதேசமாக மாறியுள்ளது

இன்று இந்த வரலாற்றுப் பெருமைமிக்க புனித ஸ்தலம் மக்கள் சூனியமான, சமய வழிபாடுகள் இடம்பெறாத தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக மாறியுள்ளது. மேற்கூறிய காரணங்களினால் 2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆம் திகதி நடைபெறவிருந்த வருடாந்த உற்சவமும் நடைபெறவில்லை.

மருத மடு ஆலயத்தின் கௌரவ அருட்தந்தைமாரும் பணியாளர்களும் மீண்டும் புனித ஸ்தலத்திற்கு சென்று ஏற்பட்டுள்ள சேதங்களை திருத்துவதற்கும் புனித ஸ்தலத்தின் கௌரவம், பெருமை,புனிதத்தன்மை என்பவற்றை பாதுகாப்பதற்கும் மன்னார் மேற்றானியார் அதிகாரிகளிடம் அனுமதி கோரியிருந்தபோதிலும் இதுவரை அந்த வேண்டுகோளுக்கு எத்தகைய பதிலும் கிடைக்கவில்லை.

இதன்படி மிகவிரைவில் மன்னார் ஆயரின்மேற்பார்வையின் கீழ் அருட்தந்தைமார் உட்பட பணியாளர்களுக்கு மருதமடு புனித ஸ்தலத்திற்குச் சென்று அங்கு திருத்தங்களை மேற்கொள்வதற்கும் மீண்டும் அருட்தந்தைமார் உட்பட பணியாளர்களுக்கு அங்கு தங்கியிருப்பதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் மருத மடுவுக்கான பாதையைத் திறக்கு மாறும் அந்த பிரதேசத்திலிருந்து குடி பெயர்ந்த அனைவரையும் குடியமர்த்து மாறும் இந்தச் சபையில் பிரேரிக்கின்றேன். அவை நிறைவேற்றப்படும் போது இதுவரை இலங்கை வாழ் அனைத்து மக்களும் ஆவலுடன் காத்திருந்ததற்கு அமைய மருதமடு மாதாவை தரிசித்து வழிபாடுகளில் ஈடுபடவும் மீண்டும் மடுஆலய திரு விழாவில் கலந்து கொள்ளவும் வாய்ப் புக் கிடைக்கும் என இச்சபையில் பிரேரிக்கிறேன்-என்றுள்ளது. (202)

## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்கு பிரதேசசபை எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இரத்ததான முகாம் ஒன்றை நடத்தவுள்ளது.

சபையின் தலைமை அலுவலகம், புத்தூர் கலைமதி பொதுமண்டபம் ஆகியவற்றில் நடைபெறவுள்ள இந்த இரத்ததான முகாமில் குருதிக் கொடையாளர்கள் பங்குபற்றி இரத்ததானம் செய்யுமாறு பிரதேசசபைச் செயலாளர் கேட்டுள்ளார். (202)

# யாழ்ப்பாண மக்களுக்கு நியாய விலையில் சிமெந்து வழங்கும் முயற்சி தொடரும்

## விநியோகப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை23

யாழ்.குடாநாட்டு மக்களின் சிமெந்துத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு, அரச அதிபரின் அனுமதியுடன் கொழும்பிலிருந்து தருவிக்கப்படும் சிமெந்தினை நியாய விலையில் வழங்கும் முயற்சியை லங்கா சிமெந்து நிறுவனம் தொடருமென அந்நிறுவனத்தின் ஒருங்கிணைப்பு அதிகாரியும், சிமெந்து விநியோகத்திற்கு பொறுப்பானவருமான பொ. விமலானந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது கொழும்பிலிருந்து ஒருடைக்கற் சிமெந்தை கொண்டு வருவ தற்கு எமக்கு ஆயிரத்து 450 ரூபா வரை செலவாகின்றது. நாம் அதனை அரச அதிபரின் அனுமதியுடன் ஆயிரத்து 475 ரூபாவிற்கு விற்பனைசெய்து வருகின்றோம்.

அண்மையில் வடமராட்சியில் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் பயன் பெறும் குடும்பங்களுக்கு தலா 18 பைக்கற் சிமெந்தினை நியாய விலையில் வழங்கியுள்ளோம். இவ்வாறு வழங்கப்படும் சிமெந்தினை சிலர் இலாப நோக்கம் கருதி வர்த்தக நிலையங்களூடாகக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இவ்வாறான சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

இத்தகைய துஷ்பிரயோகங்களை நீக்குவதற்கு எல்லோரது ஆதரவும் ஒத்துழைப்பும்தேவை-என்றார் (50-06)

# 18 நாள்களுக்குப் பின்னர் திங்களன்று கடலுக்குச் சென்றனர் ராமேஸ்வரம் மீனவர்

ராமேஸ்வரம், ஜூலை 23

இலங்கைக் கடற்படையின் தாக்குதலைக் கண்டித்து காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 18 நாட்களுக்குப் பின் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை மீண்டும் கடலுக்குச் சென்றனர் எனத் தெரிவிக் கப்படுகிறது.

மேலும் இது தொடர்பாக வெளியான தகவல்கள் வருமாறு:-

இலங்கை கடற்படையின் அத்துமீறல்களைக் கண்டித்தும், கச்சதீவுப் பகுதியில் பாதுகாப்பாக மீன் பிடிக்க உத்தரவாதம் தரவேண்டும், இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் இறக்கும் மீனவர்களின் குடும்பத்துக்கு 5 லட்சம் ரூபா நிவாரணம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தியும், ராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த 3ஆம்திகதி தொடக்கம் காலவரையரையற்ற போரா்ட்டத்தில் குதித்தனர்.

மீனவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தே. மு. தி. க. தலைவர் விஜயகாந்த் தலைமையில் 13 ஆம் திகதி ராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம் நடந்தது. மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கடந்த 17ஆம் திகதி முதல்வர் கருணாநிதியை சென்னையில் சந்தித்துப் பேசினர்.

மீனவர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதை அடுத்து காலவரையரையற்ற போராட்டம் வாபஸ் பெறப்பட்டது. இதையடுத்து மீனவர்கள் 19ஆம் திகதி முதல் கடலுக்கு செல் வார்கள் என மீனவர் சங்கப்பிரதிநிதிகள் அறிவித்தனர்.

இதற்கிடையே, இலங்கை கடற் படையின் தாக்குதலைக் கண்டித்து தமிழ கம் முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என தி. மு. க. அறிவித்தது.

தங்கள் பிரச்சினையை முன்வைத்து நடந்த போராட்டம் என்பதால் மீனவர் கள் இதில் கலந்து கொண்டனர். அன்றைய தினம் கடலுக்குச் செல்லவில்லை. 18 நாள் இடைவெளிக்குப் பின், ராமேஸ் வரம் மீனவர்கள் திங்கட்கிழமை காலை கடலுக்குச் சென்றனர்.

## நாளை

| | |
|---|---|
| ஆடி 09 | 24.07.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: | சஷ்டி |
| | பி.ப. 12.31 வரை |
| நட்சத்திரம் : | உத்திரட்டாதி |
| | மு.ப. 07.41 வரை |
| சுபநேரம் : | 07.32 - 09.02 |
| ராகுகாலம் : | 01.32 - 03.02 |

# எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் புனரமைப்பிற்கு 'லீட்ஸ்' நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம், ஜூலை23

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் புனரமைப்புப் பணிகளுக்கென 'லீட்ஸ்' நிறுவனம் உதவியுள்ளது.

சமையல் அறை, மலசலகூட வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கென மேற்படி நிறுவனம் 2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.


நிறுவனத்தின் மாவட்ட அமைப்பாளர் ஜேசன் ஜே. செல்வராஜா தலைமையிலான குழுவினர் இந்தப் புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, மாணவர்கள் ஊடாக எழுவைதீவு மக்கள் மத்தியில் வீட்டுத் தோட்டம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்றிட்டங்களை லீட்ஸ் நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது. (202-325)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## …ரவிழிகளுடன் ஐந்தாம் ஆண்டு அஞ்சலி

மண்ணில் 24 . 04 . 1953



விண்ணில் 23 . 07 . 2003

### அமரர் சிற்றம்பலம் ராதாகாந்தி

ஆண்டுகள் ஐந்து ஆனதுவே இன்று- நாம்
கொண்டிருந்த துயர் இன்றும் ஆறவில்லை
ஆண்டாண்டு காலமாய் நாங்கள் இங்கு
வேண்டிடுவோம் சாந்தி கொடு என்றே!

புலோலி கிழக்கு,
புலோலி. (76559) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 . 01 . 1964



உதிர்வு 03 . 08 . 2007

### அமரர் குமாரசாமி இராஜசிங்கம்

திதி: 23.07.2008

ஓர் ஆண்டு சென்றாலும்
ஓராயிரம் ஆண்டு போனாலும்
உன் முகமும் உன் செயலும்
எம் மனதை விட்டு அகலுமோ?

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (76569)
உங்கள் அன்பு மனைவி,
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 17 ⁕ 03 ⁕ 1957



உதிர்வு 23 ⁕ 06 ⁕ 2008

### அமரர் இராஜசிங்கம் பஞ்சலிங்கம்

(நிறைவேற்று அதிகாரி, கடன்பகுதி, இலங்கை வங்கி, பருத்தித்துறை)

எங்களுடன் உறவாடி எம்மை விட்டுப் பிரிந்த எங்கள் கழக உறுப்பினர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

யாழ்.மாவட்ட இலங்கை வங்கி ஊழியர்
விளையாட்டு நலன்புரி கலை இலக்கிய மன்றம்.
(சி/553852)


# மாதிரி செயற்றிட்ட பாடசாலைகள் தெரிவு

நவாலி, ஜூலை23

சிறுவர் பாதுகாப்பு நிதியம் மாதிரி செயற்திட்ட பாடசாலைகளாக ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை, அராலி வள்ளியம்மை வித்தியாலயம் ஆகியவற்றை யாழ்.மாவட்டத்தில்ரீதியில் தெரிவுசெய்துள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட இப் பாடசாலைகளுக்கு கற்றல் கற்பித்தல் உபகரணங்களுக்கான உதவிகளையும் பாடசாலை விட்டு விலகிய மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு வேண்டிய உதவிகளையும் நடைமுறைப்படுத்தியுள்ளது. (202-100)


## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.
(76028)

## பதவி வெற்றிடம்

அனுபவமுள்ள ஐஸ்கிறீம் தயாரிப்பாளர் மற்றும் ரீமேக்கரும் உடன் தேவை.

தொடர்பு:
நிதர்சன் கிறீம் ஹவுஸ்
பஸ் நிலையம், பருத்தித்துறை.
T.P.:077 6627246
(சி/553848)

## Spoken English

Nafisa Spoken English VCDகள் மற்றும் Learning English VCD (சிறுவர்களுக்கானது) விற்பனைக்குண்டு.

அன்னை புத்தகசாலை,
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

CF50, CF 90 ஆகிய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. (பெண்கள் பாவிப்பதற்கு உகந்தது). அத்துடன் ஒஸ்ரின் 1000 மொடல் நல்ல நிலையிலும் நல்ல பராமரிப்பு உடைய கார் விற்பனைக்குண்டு.

நேரம்: பி.ப. 3.00 - 6.00 பார்வையிடலாம்.
26, சீனிவாசகம் வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.
(கொம்பியூட்டர் சென்ரர் முன்பாக).
(76556)

பட்டதாரி ஆசிரியர் பரீட்சைக்குத் தோற்றி
நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாத மாணவர்களுக்கான

## முக்கிய கலந்துரையாடல்

21.07.2008 அன்று கௌரவ அமைச்சர் க.நி.டக்ளஸ் தேவானந்தாவிடம் கலந்துரையாடியதன் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர் நியமனத்தை பெற்றுத் தருவதாக உறுதிமொழி அளித்துள்ளார். எனவே மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு 24.07.2008 அன்று வியாழக்கிழமை 9 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலகத்திற்கு அருகில் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(76568) பட்டதாரிகள் செயற்குழு.

## Book Binders & Proof Readers
புத்தகம் கட்டுநர்கள், ஒப்புநோக்குநர்கள்
## பதவி வெற்றிடம்

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வாழ்பவர்கள் விரும்பத்தக்கது.

ஒப்புநோக்குநர்கள் க.பொ.த. (சா.த) பரீட்சையில் தமிழ், ஆங்கிலப் பாடங்களில் சித்தியெய்திய பெண்பாலார்களுக்கு முன்னுரிமை வழங்கப்பெறும்.

28.07.2008ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 3117
உதயன், யாழ்ப்பாணம்.
(சி/553821)


# மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய 17ஆம் நாள் திருவிழா

வலி.வடக்கு,ஜூலை23

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய காம்யோற்சவ திருவிழாவையொட்டி நாளை வியாழக்கிழமை 17ஆம் திருவிழா தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் உபயத்தில் நடைபெறவுள்ளது.

இத்தினத்தில் தெல்லிப்பழை மாணவர்களும் ஆசிரியர்களும் ஆலய உற்சவத்தில் கலந்துகொள்வதுடன் கூட்டுப்பிரார்த்தனையிலும், பூசை வழிபாடுகளிலும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

நாளாந்த திருவிழாக்களில் பாடசாலை சார்பில் மாணவர்கள் கூட்டுப் பிரார்த்தனை நடத்திவருகின்றனர். (202-86)


உ
சிவமயம்



ஏழாலை
ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

## வருடாந்த லட்சார்ச்சனை பெருவிழா விஞ்ஞாபனம்

காலம் : 25.07.2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பூசைகள்
: 26.07.2008 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பூசைகள்
27.07.2008 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 1008 சங்காபிஷேகப் பூசைகள்,
ஹோமங்கள் இடம்பெறும்.
12.00 மணிக்கு சுவாமி வீதியுலா
1.00 மணிக்கு அன்னதானம் இடம்பெறும்.

பிரதமகுரு: கலாநிதி தியாக கெங்காதரக்குருக்கள் - புன்னாலைக்கட்டுவன் தர்மசாஸ்தா குருகுல அதிபர்: நா.மகாதேவக்குருக்கள் ஆசியுடன் இலங்கையில் பல பாகத்தில் இருந்து வந்த பல சிவாச்சாரியர்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.

(76575) தேவஸ்தானம்.

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஆலயத்தின் திருப்பணி வேலைகளுக்கு நிதியுதவி வழங்கிய வடமாகாண விசேட செயலணித் தலைவரும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் ஈ.பி. டி.பி. கட்சியின் செயலாளருமான

கௌரவ திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கு எமது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகத்தினர்,
நரசிங்க வைரவர் ஆலயம்,
திடல்புலம், புன்னாலைக்கட்டுவன். (76573)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஆலயத்தின் திருப்பணி வேலைகளுக்கு நிதியுதவி வழங்கிய வடமாகாண விசேட செயலணித் தலைவரும், சமூக சேவைகள் சமூகநலத்துறை அமைச்சரும் செயலாளர் நாயகமுமான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி

மாண்புமிகு கௌரவ
உயர்திரு.கே.என்.டக்ளஸ்
தேவானந்தா

வட்டுக்கோட்டைப் பிரதேச பொறுப்பாளர் வள்ளுவன் அவர்களையும் எல்லாம் வல்ல வைரவப் பெருமான் திருவருள் துணையோடு பாராட்டி வாழ்த்துவதோடு அவரின் சேவை மென்மேலும் சிறக்க எம்பெருமான் திருவருள் பாலிப்பார்.

ஆலய தர்மகர்த்தா சபையினரும், ஆலய அடியார்களும்
அராலி கிழக்கு இந்தனை வைரவர் கோயில்.
(76570)

## திருமறைக் கலாமன்றம்
### கலைத்தூது அழகியல் கல்லூரி

## வளாகம் கடந்த பரதநாட்டிய பட்டப் படிப்பு

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியுடன் இணைந்து கலைத்தூது அழகியல் கல்லூரி நடத்தும் பரதநாட்டிய வளாகம் கடந்த பட்டப்படிப்புக்கான புதிய ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ்வாண்டில் பரீட்சைகளும் பயிற்சி வகுப்புகளும் யாழ்ப்பாணத்திலேயே வெற்றிகரமாக நடத்தப்பட்ட நிலையில் இப்புதிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பட்டப் படிப்புகள்

01. முதுநுண்கலைமாணி (MFA) - 2 வருடம்
02. இளநுண்கலைமாணி (BFA) - 3 வருடம்
03. பெருஞ்சான்றிதழ் கற்கை (Diploma in Dance) - 1 வருடம்

தரச் சிறப்புமிக்க மேற்படி கற்கைநெறிகள் தொடர்பான மேலதிக விவரங்களைப் பெறவும் பதிவுகளை மேற்கொள்ளவும் எமது கல்லூரியுடன் தொடர்புகொள்ளுங்கள்.

'கலைக்கோட்டம்',
இல.128, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி.: 021 222 9419

அதிபர்,
கலைத்தூது அழகியல் கல்லூரி.
(சி/553851)

புலமைப்பரிசில் திட்டம் 2008

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science 4 Months ~~10,750~~ 2,150 | Honours Diploma in Computer Science 5 Months ~~13,000~~ 2,600 | Diploma in Web page Designing 4 Months ~~10,750~~ 2,150 |
| Diploma in Graphic Designing 4 Months ~~10,750~~ 2,150 | Diploma in Desktop Publishing 4 Months ~~10,000~~ 2,000 | Diploma in Hardware Engineering 3 Months ~~10,000~~ 2,000 |
| Diploma in AutoCAD 3 Months ~~10,000~~ 2,000 | Diploma in Microsoft Office 3 Months 1,500 | Accounting Package 3 Months ~~10,750~~ 2,150 |

80% OFF

Multimedia Projector

50% OFF


Diploma in multimedia ~~5,500~~ 2,750
Diploma in Video Editing ~~6,500~~ 3,250

25/07/2008- 02PM
26/07/2008- 09 or 01
27/07/2008- 09 or 01
28/07/2008- 09AM
30/07/2008- 09 or 02

COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#167, KASTHURIYAR RD, JAFFNA. 021 222 8250


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளிதரன் + மெண்டிஸ் Vs இந்திய அணி எஸ்.எஸ்.ஸியில் இன்று முதல் டெஸ்ட் போட்டி


பயிற்சியில் சங்ககார

கொழும்பு, ஜூலை 23

இலங்கை, இந்திய அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி இன்று கொழும்பு எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது. இலங்கை அணியின் சுழல் கூட்டணியான முரளிதரன் மற்றும் அஜந்த மெண்டிஸ் ஆகியோரை, பலம்வாய்ந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்ட இந்திய அணி தாக்குபிடித்து வெற்றியை ருசிக்குமா என்பதுதான் ரசிகர்களின் கேள்வி.

முதல் டெஸ்டில் பங்கேற்கும் இலங்கை அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. 'மாயாஜால' பந்துவீச்சாளரான அஜந்த மெண்டிஸ் டெஸ்ட் போட்டிகளில் முதன்முறையாக வாய்ப்புப் பெற்றுள்ளார். லசித் மலிங்க, பர்வேஸ் மஹ்ரூப் ஆகியோர் காயமடைந்த நிலையில் இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சு பரிதாபமாகக் காட்சியளிக்கிறது. எனினும், சமிந்த வாஸ் மற்றும் நுவான் குலசேகர ஆகியோர் கைகொடுப்பார்கள் என நம்பலாம்.

இலங்கை முதல் டெஸ்ட் போட்டியில் 6 துடுப்பாட்ட வீரர்கள், 4 பந்துவீச்சாளர்கள், ஒரு விக்கெட் காப்பாளர் என்ற கூட்டணியில் களமிறங்கவிருக்கிறது. ஆட்டத்தைத் தொடக்கும் பொறுப்பை மலிந்த வர்ணபுர - மைக்கல் வன்டோர்ட் ஜோடி பெற்றுள்ளது.

விக்கெட் காப்பாளராக பிரசன்ன ஜெயவர்த்தன அறிவிக்கப்பட்ட நிலையில் சங்ககார துடுப்பாட்ட வீரராக களமிறங்குகிறார். பயிற்சிப் போட்டிகளில் சிறப்பாக விளையாடிய சமர சில்வா, கப்புகெதர ஆகியோரும் வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இலங்கை அணியின் வேகப் பந்துவீச்சுதான் பரிதாபமான நிலையில் இருக்கிறது. லசித் மலிங்க, பர்வேஸ் மஹ்ரூப் ஆகியோரின் காயம் இன்னும் முழுமையாகக் குணமடையவில்லை. இந்நிலையில் பயிற்சிப் போட்டியில் பங்கேற்ற டில்கார பெர்ணாண்டோவும் முதல் போட்டிக்கான உடற்தகுதியில் தேறாதமை, இலங்கை அணிக்குப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. சமிந்த வாஸ் நல்ல நிலையில் இருப்பது ஆறுதலான விடயம். இரண்டாவது வேகப்பந்து வீச்சாளராக திலான் துஷரா அல்லது நுவான் குலசேகர களமிறங்கலாம்.

டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய முரளிதரன் அணியில் இடம்பெற்றுள்ளார். சமீபத்தில் நடந்த ஆசியக் கிண்ண இறுதியாட்டத்தில் இந்தியத் துடுப்பாட்ட வீரர்களைத் திணறச் செய்த அஜந்த மெண்டிஸ், முரளியுடன் இணைந்து பந்துவீசும் வாய்ப்பை பெற்றுள்ளார். இந்தச் சுழல் கூட்டணியின் தாக்குதலுக்கு இந்தியத் துடுப்பாட்டப் படை தாக்குப் பிடிப்பது சிரமமான காரியம் என்றே கருதப்படுகின்றது.

சச்சின் டெண்டுல்கர், ராகுல் டிராவிட், செளரவ் கங்குலி, வி.வி.எஸ். லக்ஸ்மன் ஆகியோரின் அனுபவ ஆட்டமும் ரோகித் சர்மா, கம்பீர், கார்த்திக் ஆகியோரின் துடிப்பான ஆட்டமும் கைகொடுத்தால் இலங்கை அணியைச் சமாளித்து வெற்றிக்காகப் போராடலாம். பந்துவீச்சில் கும்ளே, ஹர்பஜன் ஆகியோரின் சுழலும் சஹீர்கான், முனாப் பட்டேல் ஆகியோரின் வேகமும் கைகொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

இரு அணிகளும் இதுவரை 26 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியுள்ளன. இவற்றில் இந்திய அணி 10 போட்டிகளிலும், இலங்கை அணி 3 போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ளன. 13 போட்டிகள் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்திருந்தன.

## இலங்கையை அதன் சொந்த மண்ணில் சந்திப்பது மிகவும் சவாலானது - டிராவிட்

இலங்கை அணியை அதன் சொந்த மண்ணில் எதிர்கொள்வது மிகவும் சவாலானது என்று டிராவிட் கூறியுள்ளார்.

இதுகுறித்து டிராவிட் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை அணியிலுள்ள 4 அல்லது 5 பந்துவீச்சாளர்களில் மெண்டிஸும் ஒருவர். எனவே அவரை மட்டும் கவனம் செலுத்தக் கூடாது. அந்த அணியில் முரளிதரன், வாஸ் உள்ளிட்ட சிறந்த பந்து வீச்சாளர்களும் உள்ளனர். அவர்கள் இருவரும் சேர்ந்து 1000 விக்கெட்டுக்களுக்கு மேல் கைப்பற்றி உள்ளனர். மெண்டிஸ் மீது மட்டும் கவனம் செலுத்துவது தவறாகும்.

சொந்த மண்ணில் அந்த அணி எப்பொழுதுமே சவாலாகத்தான் விளங்கும். முரளிதரன் ஆட்டத்தில் முக்கிய பங்கு வகிப்பார். எந்தச் சூழ்நிலையிலும் வாஸ் சிறப்பாகப் பந்து வீசுவார். இலங்கை அணியின் துடுப்பாட்ட வரிசையும் வலுவாக உள்ளது. இங்குள்ள சூழ்நிலையை அவர்கள் சரியாக பயன்படுத்துவார்கள். அவர்கள் நீண்ட நேரம் துடுப்பாட்டம் செய்வார்கள்- இவ்வாறு டிராவிட் கூறினார்.

# பத்து விக்கெட்டுகளால் தென்னாபிரிக்கா வெற்றி

லீட்ஸ், ஜூலை 23

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் - போட்டியின் நான்காம் நாளில் வெற்றியைச் சுவீகரித்துக்கொண்டது.

இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 203 ஓட்டங்களையும், தென்னாபிரிக்கா 522 ஓட்டங்களையும் சேர்த்தன. 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 50 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றுமுன்தினம் நான்காம் நாள் ஆட்டம் நடைபெற்றது. 3ஆவது விக்கெட்டுக்காக 59 ஓட்டங்கள் சேர்த்திருந்த நிலையில் அன்டர்ஸன் 34 ஓட்டங்களுடன் ஸ்ரைனின் வேகத்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார். தொடர்ந்து களம் புகுந்த பீற்றர்ஸன் வெறும் 13 ஓட்டங்களுடன் கலிஸின் பந்துவீச்சில் பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். நம்பிக்கை நட்சத்திரமான இயன் பெல்லும் 4 ஓட்டங்களுடன் மோர்கீலிடம் சரணடைய இங்கிலாந்து தத்தளிக்கத் தொடங்கியது.

இந்த இக்கட்டான நிலையில் பொறுப்பாக ஆடிக்கொண்டிருந்த அலஸ்ரியர் குக் 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து சிக்கலில்மாட்டிக்கொண்டது. 178பந்துகளுக்குமுகம் கொடுத்திருந்த அவர், தனது ஓட்ட எண்ணிக்கையில் 6 பவுண்டரிகளையும் சேர்த்திருந்தார்.

7ஆவது விக்கெட்டில் இணைந்த அம்புரோஸ் - பிளின்ரொப் ஜோடி அணியைத் தூக்கி நிறுத்த முயற்சித்தது. இவர்கள் தம்மிடையே 68 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் அம்புரோஸ் 36 ஓட்டங்களுடன் ஸ்ரைனிடம் விக்கெட்டைப் பறிகொடுத்தார். பொறுமையாக ஆடிய பிளின்ரொப்பும் 38 ஓட்டங்களுடன் மோர்கீலின் வேகத்தில் ஆட்டமிழந்தார். பனிஷர் 10 ஓட்டங்களுடன் ஸ்ரைனின் பந்துவீச்சில் 'போல்ட்' ஆனார்.

இங்கிலாந்து அணி 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 266 ஓட்டங்களைப் பெற்று இன்னிங்ஸ் தோல்வியை எதிர்நோக்கியிருந்தது. இந்நிலையில் 10ஆவது விக்கெட்டில் இணைந்த ஸ்ருவேட் பிராட் - பற்றிஸன் ஜோடி அணியின் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்தது.

அபாரமாக ஆடிய ஸ்ருவேட் பிராட் 60 பந்துகளில் 11 பவுண்டரிகளுடன் 67 ஓட்டங்களை விளாசினார். இறுதி விக்கெட்டாக பற்றிஸன் 13 ஓட்டங்களுடன் மோர்கீலின் பந்துவீச்சில் 'போல்ட்' ஆக இங்கிலாந்தின் இரண்டாம் இன்னிங்ஸ் 327 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

பந்துவீச்சில் டேல் ஸ்ரைன், மோர்னே மோர்கீல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், நிற்னி மற்றும் ஜக் கலிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்து வெறும் 8 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற நிலையில், தென்னாபிரிக்க அணி 2ஆவது இன்னிங்ஸில் 1.1 ஓவர்களில் 9 ஓட்டங்களை எடுத்து 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றியைச் சுவீகரித்தது. போட்டியின் சிறப்பாட்டக்காரராக அஸ்வெல் பிரின்ஸ் தெரிவானார்.

# பொஸ்னிய போர்க்குற்றங்களுக்காகத் தேடப்பட்ட முக்கிய குற்றவாளி ரடோவன் சேர்பியாவில் கைது



பெல்கிரேட், ஜூலை 23

பொஸ்னிய போர்க் குற்றங்களுக்காகத் தேடப்பட்டு வந்த ரடோவன் கராம் ஜிக், ஒரு தசாப்தகால வேட்டையின் பின்னர் நேற்றுமுன்தினம் சேர்பியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டார். உலகிலேயே போர்க் குற்றங்கள் தொடர்பாக தேடப்பட்டு வந்த முக்கிய நபர்களில் இவருமொருவர்.

பொஸ்னிய சேர்ப் யுத்தகால அரசியல் தலைவராக இருந்த ரடோவன் கராம் ஜிக், 1996ஆம் ஆண்டு தலை மறைவானார். 1995 ஆம் ஆண்டு, சேர்பினிக்காவில் பெருந்தொகையானோர் கொன்று குவிக்கப்பட்டமைக்கு இவர் காரணமாகவிருந்தார்.

இந்த யுத்த காலக் குற்றச் செயல்கள் தொடர்பாக, ஐ.நா.நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது. இதன் முடிவில் போர்க் குற்றங்கள், இனப்படு கொலைகள் ஆகியவை சம்பந்தமாக ரடோவன் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டார். அத்துடன் இவரைக் கைது செய்வதற்கான பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ரடோவன் கைது செய்யப்பட்டமைக்கு, ஹேகுவிலுள்ள போர்களக் குற்றங்கள் தொடர்பான வழக்கறிஞர்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளார்கள். அத்துடன் தங்களின் நடவடிக்கையில் இது 'ஒரு மைல்' கல்லாகும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

சட்ட முன்னெடுப்புகளுக்கேற்ப ரடோவன் பெல்கிரேட்டிலுள்ள யுத்தக் குற்றங்களுக்கான நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். விரைவில் சர்வதேச போர்குற்றங்களுக்கான நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டு விடுவார் என சேர்பிய ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அவர் தொடர்பாக, நேற்றுச் செவ்வாய் கிழமை பெல்கிரேட்ஸ் வழக்கு தொடுநரின் செயல்பாட்டுக் குழு உறுப்பினர்கள், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கூடி ஆராய்ந்தார்கள் என பி. பி. ஸியின் கிழக்கு ஐரோப்பிய நிருபர் நிக் தொர்பி தெரிவித்துள்ளார்.

(சி)

## நேபாள ஜனாதிபதி இன்று பதவியேற்பு

காத்மாண்டு, ஜூலை 23

நேபாளத்தின் முதல் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ராம்பரன் யாதவ் இன்று பதவியேற்கிறார். ஜனாதிபதி ராம்பரன் யாதவுக்கு நேபாள உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

பதவியேற்பைத் தொடர்ந்து முன்னாள் மன்னர் ஞானேந்திரா பயன்படுத்திய கறுப்பு நிற லிமோசின் காரில் ஜனாதிபதி யாதவ் பாதுகாப்பு வாகனங்கள் பின்தொடர, மகாராஜ்கஞ்ச் பகுதியில் உள்ள ஷீத்தல் நிவாஸ் என்ற தனது வீடு மற்றும் அலுவலகத்திற்கு செல்கிறார். ஜனாதிபதிக்கு ஆயிரம் இராணுவ வீரர்கள் அடங்கிய பாதுகாப்பு வலயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## நளினிக்கு ஆதரவுக் கூட்டம்: அனுமதி மறுத்தமைக்கு பதிலளிக்க தமிழக அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்



சென்னை, ஜூலை 23

ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினியை விடுதலை செய்ய வலியுறுத்தும் பொதுக் கூட்டத்துக்கு அனுமதி அளிக்க மறுத்தமை தொடர்பாகப் பதில் மனுத்தாக்கல் செய்யுமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது குறித்துத் தமிழகத்திலிருந்து கிடைத்த தகவல்கள் வருமாறு:

அண்ணா பிறந்த நாளில், வேலூர் சிறையில் இருக்கும் நளினியை விடுதலை செய்ய வலியுறுத்தி சென்னையில் பொதுக் கூட்டம் நடத்த அனுமதி கோரப்பட்டது. இதற்கு பொலிஸார் அனுமதி மறுத்தனர்.

இதை எதிர்த்து வழக்கறிஞர் புகழேந்தி, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். மனுவில், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று வேலூர் சிறையில் 17 ஆண்டுகளாக நளினி உள்ளார். அண்ணா பிறந்த நாளில் கைதிகள் விடுதலை செய்யப்படுகின்றனர். செப்டெம்பர் 15ஆம் திகதி அண்ணாவின் நூற்றாண்டு விழாவாகும். அப்போது நளினி உள்ளிட்டவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி ஜூலை 19இல் சென்னை திருவல்லிக்கேணியில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதிக் கேட்டு விண்ணப்பித்தோம். இம் மனுவை பொலிஸார் தள்ளுபடி செய்து விட்டனர்.

இந்தப் பொதுக் கூட்டத்தை நடத்த அனுமதி அளிக்க வேண்டும் ... டுள்ளது.

இந்த மனு நீதிபதி ஏ. குலசேகரன் முன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது. இது குறித்து 4 வாரங்களுக்குள் பதில் அளிக்கும் படி அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதி உத்தர விட்டார்.

## தமிழக நடிகர்களில் முதன்முறையாக அமெரிக்காவில் ரஜினிக்கு 'கட் அவுட்'




சென்னை, ஜூலை 23

தமிழக நடிகர்களில் முதன்முறையாக சுப்பர்ஸ்டார் ரஜினிகாந்துக்கு அமெரிக்காவில் பிர மாண்டமான 'கட்அவுட்'கள் வைக்கப்பட்டுள்ளன என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இதுகுறித் துத் தெரிவிக்கப்பட் டிருப்பவை வருமாறு:-

கவிதாலயா, செவன் ஆர்ட்ஸ் இணைந்து தயாரித்துள்ள படம் 'குசேலன்.' தெலுங்கில் 'கதாநாயகடு' என்ற பெயரில் வெளியாகிறது. இப்படம் அமெரிக்காவில் ஒகஸ்ட் முதலாம் திகதி திரைக்கு வருகிறது. இதற்காக இப்படம் திரையிடப்படும் அமெரிக் கத் தியேட்டர்களுக்கு வெளியே 25 அடி உயரத் தில் 'குசேலன்' படத்தில் ரஜினி இடம்பெறும் காட் சிகள் 'கட் அவுட்டு'களாக வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப்படம் திரைக்கு வரும் முன் அமெரிக்க நகரங்களில் அப்படத்தின் கதாநாயகனுக்கு 'கட்அவுட்' வைக்கப்படுகின்றமை இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து 'குசேலன்' படத்தின் அமெரிக்க விநியோகஸ்தர் ஜெயவேல் முருகன் கூறும்போது,

''அமெரிக்காவில் தமிழ்ப் பட ரசிகர்கள் அதிகரித்து வருகின்றனர். ரஜினிக்கு இங்கு தனி ரசிகர் பட்டாளமே உள்ளது. அவர்களை ஈர்க்கும் விதத்தில் ரஜினியின் 'கட்அவுட்'களை இங்கு வைத்திருக்கிறோம். ... வரவேற்புக் கிடைத்துள்ளது. அமெரிக்கர்கள் கூடப் பலர் படம் எப்போது திரைக்கு ... என்னிடம் கேட்டார்கள் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரடங்கு நேரம் நள்ளிரவில் நடமாடியவர் படையினரின் சூட்டுக்கு இலக்காகி மரணம்

## மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயப்பகுதியில்

யாழ்ப்பாணம், ஜூலை 23

மானிப்பாய்(நவாலி வடக்கு) வேலக்கைப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் ஊரடங்கு நடைமுறையில் இருந்த நேரம் - நள்ளிரவு ஒருமணியளவில் - நடமாடிய ஒருவர் படையினரின் சூட்டுக்கு இலக்காகி மரண மானார்.

இச்சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார்.

மரணமானவரிடம் இருந்த அடையாள அட்டை மூலம் குருநகரைச் சேர்ந்த இராமச்சந்திரன் ஜீவிதன்(வயது 19) என்று அவர் இனங்காணப்பட்டுள்ளார்.

இரவு நேரத்தில் நடமாடிய இந்நபரை படையினர் மறித்து விசாரிக்க முற்பட்ட போது அவர் ஓடினார் என்றும் அவ்வேளை சுடப்பட்டார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட் டது.

விசாரணையின் பின் சடலத்தை பிரேத பரி சோதனைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தர விட்டார்.

நவாலி, மானிப்பாய் பகுதிகளில் இடம் பெற்ற பல கொள்ளைச் சம்பவங்களுடன் மரண மானவர் தொடர்புபட்டவர் என்றும்- நேற்றும் கொள்ளை நோக்கமாக இரவில் நடமாடியிருக்கலாம் என்றும்- கூறப்படுகி றது.

இவருடன் சென்ற மற்றும் இருவர் காய மடைந்தனர் எனக் கூறப்பட்டபோதும், அதனை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.

# 'வீடியோ' கடையில் திரைப்படம் பார்த்துக்கொண்டிருந்த இளைஞர் உள்ளே புகுந்த ஆயுததாரிகளால் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 23

உரும்பிராய், யோகபுரத்தில்"வீடியோ" கடை ஒன்றில் வைத்து இளைஞர் ஒருவர் நேற்று நண்பகல் 12.30மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட் டார்.

அதே இடத்தைச் சேர்ந்த இராசகுட்டி சந்திரமோகன் (வயது 22) என்ற கூலித் தொழிலாளியே சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார்.

யாழ்.நீதிவான் இ.வசந்தசேனன் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

கொலையுண்ட இளைஞர் வீடியோக் கடையில் தொலைக்காட்சியில் திரைப்படம் பார்த்துக் கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் ("ஸ்கூற்றிபெப்") வந்த இரண்டு இளைஞர்கள் ''வீடியோ'' பிரதி ஒன்றை பெறுவதற்கு வந்ததாகத் தெரிவித்தனர் என்றும் - கடையின் உள்ளே சென்றதும் அவர்கள் திடீரென சந்திரமோகன் மீது சுட்டுவிட்டு தப்பி விட்டனர் என்றும் - விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரணமானவரின்பிரேதபரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-01-25)

## முதலில் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டுஅமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலி களுடன் யுத்த நிறுத்த உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ள வேண்டிய தேவை அரசிற்கு எழவில்லை என்று கூறிய அவர், விடுதலைப் புலிகளை இலங்கை அரசு நம்பவேண்டுமென்றால் "அவர்கள் முதலில் ஆயுதங்களைக் கைவிட்டு சரணடைய வேண்டும் என்றார்.(அ-சி)

## மடுமாதாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொரூபம் வைக்கப்பட்டுள்ளது. மடு மாதா அன்னையின் திருச்சொரூபம் இப்போதைக்கு - உடனடியாக - மக்களின் வழிபாட்டுக்கு வைக்கப்படமாட்டாது. சுமுகநிலை தோன்றிய பின்னர் மடுத் தேவாலயத்தில் நிலைப்படுத்தப்பட்ட பின்னரே வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்யப்படும் -என்றும் யாழ்.ஆயரின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (அ-01)

## கொம்பனித்தெரு வீடுடைப்பு விவகாரம்:

# மனுதாரர் தரப்பு சட்டத்தரணியைக் கடத்த நீதிமன்ற வளாகத்தில் வெள்ளைவான்!

கொழும்பு, ஜூலை 23

'சார்க்' மாநாட்டுக்கான பாதுகாப்பு ஏற்பாடு என்ற பெயரில் கொழும்பு கொம்பனி வீதியில் பல நூற்றுக்கணக்கான வீடுகளை இடித்துத் தகர்க்க எடுக்கப்பட்ட அரசின் முயற்சிக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில், அந்த வழக்கின் மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணியைக் கடத்திச் செல்வதற்கு கொழும்பு ஹல்ஸ்டோர்ப் நீதிமன்ற வளாகத்துக்கே வெள்ளைவான் ஒன்று வந்திருப்பதாக நேற்று நீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்து இப்பிரச்சினை குறித்து விரிவாக விசாரணை நடத்தி விளக்க அறிக்கை ஒன்றை நாளை (வியாழக்கிழமை) நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் டபிள்யூ. தயாரத்னவுக்கு உயர்நீதி மன்றம் நேற்று உத்தரவிட்டது.

மேற்படி வீடு தகர்ப்பு முயற்சிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ள உயர்நீதிமன்றம் அந்த வீடுகளைத் தகர்ப்பதற்கு எதிராக தடையுத்தரவும் விதித்திருந்தது.

எனினும், இந்தத் தடை உத்தரவு தமக்கு எழுத்தில் கிடைக்கவில்லை என்ற விளக்கத்தை வைத்துக்கொண்டு - அந்த வீடுகளின் உரிமையாளர்கள் கதறிக் கதறி அழவும், தடுக்கவும் அவற்றையும் கவனிக்காமல், கணிசமான வீடுகளைக் கடந்த வெள்ளியன்று அரச தரப்பு இடித்துத் தரைமட்டமாக்கியது தெரிந்ததே.

நேற்று இந்த அடிப்படை உரிமை மீறல் மனு மீண்டும் உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஷிராணிதிலகவர்த்தன, அன்ட்ரூ சோமவன்ஸ, கே.ஸ்ரீபவன் ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது மனுதாரர்கள் சார்பில் ஆஜரான நெத்ஸ்ரீ பரணவிதாரண குறித்து நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

வீடுடைப்பு நடவடிக்கைக்கு எதிராகக் கடந்த வெள்ளியன்று நீதிமன்றம் விடுத்த தடை உத்தரவை, வீடுடைப்பில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளிடம் ஒப்படைக்கச்சென்று அங்கு களேபரத்தை எதிர்கொண்ட இவரை, இப்போது கடத்திச் செல்வதற்காக நீதிமன்ற வளாகத்திற்கு வெள்ளை வான் ஒன்று வந்திருப்பதாக நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இவ்விடயம் குறித்து விசாரித்து விரிவான - விவரமான - அறிக்கையொன்றை நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கும்படி சட்டத்தரணிகள் சங்கத் தலைவருக்கு உத்தரவிட்டு வழக்கை நாளை வரை ஒத்திவைத்தது நீதிமன்றம்.

நாளை வழக்கின் எதிர்மனுதாரர்கள் அனைவரையும் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நோட்டீஸ் பிறப்பிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (சி)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு தொடர்பாக விமல் வீரவன்ஸ நாடாளுமன்றில் நேற்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சார்க் மாநாடு முடியும் வரை ஒரு தலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்கப் போகிறார்கள் என்று புலிகள் அறிவித்துள்ளனர். இந்த அறிவிப்பை நாம் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

புலிகளின் இந்த அறிவிப்பை நாம் கணக்கில் எடுக்கவே இல்லை. அரசு யுத்தத்தில் பாரிய வெற்றியைப் பெற்றுவரும் இந்த நிலையில் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்புக்கு கட்டுப்பட வேண்டிய அவசியம் எமக்கில்லை.

இந்த அறிவிப்பு தொடர்பாக நோர்வே போன்ற நாடுகளுடன் பேசவும் தயாரில்லை. எமது யுத்த நடவடிக்கை தடையின்றித் தொடரும்.

நாம் தற்போது யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளவோ அல்லது புலிகளுடன் பேச்சில் ஈடுபடவோ தயாரில்லை என்பதை அனைவருக்கும் மிகத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறோம். - என்றார் (அ-சி)

## தெஹிவளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படு கின்றது.

செல்வகுமார், பண்டாரிகுளம் வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார்.சண்முகராஜா, மாத்தளை அலுவிகாரையைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார். இவர்கள் காணாமற் போயுள்ளமை தொடர்பாக இவர்களுடன் தொழில்புரியும் சக ஊழியர் ஒருவர் மக்கள் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். அத்துடன் இச்சம்பவங்கள் தொடர்பாக தெஹிவளை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது.

## காங்கிரஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### பிரதமரைப் பேசவிடாது கூச்சல்

இந்த நம்பிக்கை வாக்கெடுப்பு மீதான விவாதங்கள், வாதப்பிரதி வாதங்களால் நேற்றுமுன்தினமும் நேற்றும் புதுடில்லி நாடாளுமன்றம் சூடுபிடித்திருந்தது.

நேற்று மாலை 6.30 மணிக்கு பிரதமர் பதிலளித்துப் பேசவிருந்தார். அவர் பேச எழுந்ததும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரதமருக்கு முன்பாக எழுந்து நின்று கூச்சல் போட்டனர். பிரதமரால் உரையாற்றவே முடியவில்லை. அதனால், இரவு 7.20 மணியளவில் அவர் தனது உரையை எழுத்துவடிவில் சபாநாயகரிடம் கையளித்தார்.

இதனையடுத்து வாக்குப்பதிவு நடந்தது. இலத்திரனியல் மூலமான வாக்குப் பதிவில் அரசுக்கு ஆதரவாக 253 வாக்குகளும் எதிராக 232 வாக்குகளும் பதிவாகின. அதனைத் தொடர்ந்து வாக்குச்சீட்டு மூலமான வாக்களிப்பின் முடிவுகள் எண்ணப்பட்டன. முடிவில், காங்கிரஸ் கூட்டணி அரசு 275 வாக்குகளைப் பெற்று 19 வாக்குகளால் வெற்றிபெற்றதாக சபாநாயகர் அறிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுக் காலை முதலே கூச்சல் குழப்பங்களும், வாதப்பிரதிவாதங்களும் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தன. இதனால் நான்கு தடவைகள் சபாநாயகர் சபையை ஒத்திப்போடவேண்டியதாயிற்று.

### எதிரணி எம்பிக்களுக்கு லஞ்சம் வழங்கியதாக சான்றுப் பொருள்களுடன் சபையில் கூச்சல்

இதற்கிடையில் அரசுத் தரப்பினர் எதிரணி எம்பிக்கள் சிலரை விலைக்கு வாங்கிவிட்டனர் அல்லது வாங்க முயற்சித்தனர் என்றொரு பிரச்சினை எதிர்க்கட்சிக்காரர்களால் எழுப்பப்பட்டது. பிரதான எதிர்க்கட்சியான பா.ஜ.க. உறுப்பினர்கள் மூவருக்கு தலா மூன்று கோடி ரூபா கொடுத்து அரசுக்கு ஆதரவளிக்குமாறு கூட்டணிப் பிரமுகர்கள் கோரினர் என்று கூறிய எதிர்க்கட்சியினர், அம்மூவருக்கும் முற்பணமாக தலா ஒரு கோடி ரூபா கொடுக்கப்பட்டதாகவும் கூச்சலிட்டனர். அவ்வாறு முற்பணமாகக்கொடுக்கப்பட்டதாகக் கூறி மூன்று கோடி ரூபா பணநோட்டுக்கட்டுக்களையும் நாடாளுமன்றுக்குள் கொண்டு வந்து காட்டி ஆர்ப்பரித்தனர்.

இந்திய நாடாளுமன்ற வரலாற்றிலேயே இப்படியானதொரு குற்றச்சாட்டு - சான்றுப்பொருள்- சபைக்குக் கொண்டுவரப்பட்டமை இதுவே முதற்தடவை என்று கூறப்பட்டது.

எது எப்படியோ, முடிவில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு 19 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தனது பெரும்பான்மையை இப்போதைக்கு நிலை நாட்டி தப்பித்துக்கொண்டது.

வாக்கெடுப்பில் அரசு வெற்றிபெற்றுவிட்டதாக செய்திகள் வெளியானதும் சகல மாநிலங்களிலும் காங்கிரஸ் மற்றும் அரசக்கூட்டணிக்கட்சிகளின் ஆதரவாளர்கள் ஆர்ப்பரித்தனர். தமது வெற்றியை பட்டாசு கொளுத்தியும், இனிப்புப்பண்டங்களைப் பரிமாறியும் கொண்டாடி மகிழ்ந்தனர். (அ)

## காங்கேசன்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறந்த குழந்தையொன்று படிப்படியாக வளர்ச்சியடைவது போல, லங்கா சிமெந்து நிறுவனத்தையும் படிப்படியாக முன்னேற்ற முயன்று வருகின்றேன். அதன் ஓர் அங்கமாகவே காங்கேசன்துறையிலுள்ள லங்கா சிமெந்து நிறுவனத் துக்கு சொந்தமான தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

தற்போது தொழிற்சாலை தொடர்பான பூர்வாங்க மதிப்பீடுகள் நடைபெற்று வருகின்றன. அதன் பின்னர் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஓரிரு மாதங்களில் தொழிற்சாலையை இயங்க வைக்க முடியுமென நம்புகிறேன்.

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது நிறுவனத் தொழிற்சாலை மூடப்பட்டதால் அங்குள்ள இயந்திரங்களில் சில பயன்படுத்த முடியாதவையாகிவிட்டன. எனவே பாவிக்க முடியாத இயந்திரங்கள் எவையெனக் கண்டறிந்து, அவற்றுக்குப் பதிலாக புதிய இயந்திரங்களை அங்கு பொருத்தவுள்ளோம்.

தற்போதைய சூழலைக் கருத்திற் கொண்டு, லங்கா சிமெந்து நிறுவன தொழிற்சாலை தொடங்கப்பட்டாலும் முன்னர் இயங்கியதைப் போல முழுமையாகச் செயற்பட முடியாது என்பதே யதார்த்தம். படிப்படியாகவே எமது தொழிற்சாலையின் பணிகள் விஸ்தரிக்கப்படும்.

எமக்குள்ள நிதிப்பிரச்சினை காரணமாக, லங்கா சிமெந்து நிறுவனம் வெளிநாட்டு நிறுவனங்களுடன் கூட்டாகவே செயற்படவுள்ளது. இந்தியாவின் 'பிர்லா' நிறுவனம், 'ஹோல்கிம்' நிறுவனம் உள்ளிட்ட சில நிறுவனங்கள் எங்களுடன் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன. எனினும் எந்த நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றுவது என்பது குறித்து இறுதி முடிவை நாம் இன்னமும் எடுக்கவில்லை. அவ்வாறு வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டாலும் தொழிற்சாலையின் நிர்வாகம் லங்கா சிமெந்து நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும்.

### குடாநாட்டு இளைஞருக்கு தொழில் வாய்ப்பு

லங்கா சிமெந்து நிறுவனம் செயற்படத் தொடங்கும் போது அங்கு பணிபுரியும் வாய்ப்பு யாழ்.குடாநாட்டு இளைஞர்களுக்கே வழங்கப்படும். சில பிரிவுகளில் நிபுணத்துவ அறிவினைப் பெறும்பொருட்டு சில வெளிநாட்டு நிபுணர்கள், பொறியியலாளர்கள் பணியாற்ற வேண்டி வந்தாலும், ஏனைய எல்லாப் பணிகளிலும் குடாநாட்டு இளைஞர்களே அமர்த்தப்படுவர். அத்தோடு இத்தொழிற்சாலை மூலம் கிடைக்கின்ற லாபத்தின் ஒரு பகுதியை யாழ். குடாநாட்டுக் கல்வி, சுகாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காகவும் பயன்படுத்தவுள்ளோம்- என்றார் அவர்.

இதேவேளை காங்கேசன்துறையில் சிமெந்து தொழிற்சாலை செயற்பட ஆரம்பித்தால், அங்கு பணிபுரிவதற்காகத் தொழிலாளர்கள் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் வரவேண்டியிருக்கும். அவர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்பினை படையினர் மேற்கொள்வதற்கான அனுமதியை ஜனாதிபதியும், அரசாங்கமும் விரைவில் வழங்கலாமென மாநாட்டில் கலந்து கொண்ட இராணுவ அதிகாரியொருவர்தெரிவித்தார். (50-06)

SUBRA(14)
பௌதிகவியல் கருத்தரங்கு
யாழ் புகழ் குகன்
24.07.2008 மாலை 3மணி தொடர்ந்து 3தினங்கள்
★ முழுமையான அலகு
★ மாதிரி வினாக்கள்
அனுமதிகள் 23ல் பெறவும்.

விடு விற்பனைக்கு
கொக்குவில் கிழக்கு, ஆடியபாதம் வீதியில் இருந்து கோவில் வீதி ஆரம்பத்தில் இல.27, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் 4 பரப்புக் காணியுடன் தனிக் கிணறு, தனிவீடு, வளவு வருமானத்துடனும் மற்றும் தொலை பேசி வசதியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 141B, பலாலி வீதி, தபால் பெட்டி சந்தி, திருநெல்வேலி. 0773151530

கருத்தரங்கு
இந்து நாகரிகம்
காலம்
24.07.2008 வியாழன்
25.07.2008 வெள்ளி
ஆசிரியர்
S.ஜெயக்குமார்
யூனிவேர்சல்

விக்னா கல்வி நிலையம்
தலைமையகம்
52, ஸ்ரான்லி வீதி யாழ்.
மாபெரும் கருத்தரங்கு
தமிழ் திரு. குழந்தை
காலம்:
30.07.2008
31.07.2008 9மணி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org